வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 18.06.2022 சனிக்கிழமை | இதழ் : 194 | பக்கங்கள் : 16



# நாட்டில் பெற்றோலுக்காக என்றுமில்லாத நெருக்கடி!

## வரலாற்றில் இல்லாத நீண்ட வரிசைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 18

பெற்றோல் மற்றும் டீசலைப் பெறுவதற்காக நேற்று யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட நாடு முழுவதும் வரலாற்றில் என்றுமில்லாத மிக நீண்ட எரிபொருள் வரிசைகள் காணப்பட்டன.

மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகம் காரணமாகவே இந்த வரிசைகள் உருவாகின என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், நாட்டில் உள்ள 85 சதவீத எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தீர்ந்து விட்டது என்று

15

# இரு வாரங்களுக்கு வீட்டிலிருந்தே பணி!

## சுற்றறிக்கை வெளியானது திங்கள் முதல் நடைமுறை

கொழும்பு, ஜூன் 18

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இரு வாரங்கள் அரச பணியாளர்கள் வீட்டிலிருந்தே பணியாற்றலாம் என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதேசமயம், பாடசாலை கற்றல் நடவடிக்கைகளை இரு வார காலமும் இணையம் வழியே நடத்துவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடு முழுவதும் தற்போது எரிபொருள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. எனவே, எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பும்வரை இந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி அலுவலகம் கூறியுள்ளது.

எனினும், அத்தியாவசிய சேவைகள் வழமைபோன்று இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பாடசாலைகளை தொடர்ந்து இயக்கமுடியாது நிலைமை!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளை தொடர்ந்தும் இயக்குவது கேள்விக்குறியாக உள்ளது. இதனை அரசாங்கம் உணராமல் இருப்பது வேதனையாக உள்ளதென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

15

# கிடைக்கும் எரிபொருட்களை நாடுபூராகவும் வினியோகிக்குக!

## ஜனாதிபதி கோட்டாபய உத்தரவு

கொழும்பு, ஜூன் 18

கிடைக்கும் எரிபொருளை நாடளாவிய ரீதியில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது, பொதுப் போக்குவரத்துக்கு முக்கியத்துவம் அளிக்குமாறும் அவர் ஆலோசனை

15

# நெருக்கடி நிலையிலிருந்து நாடு விரைவில் மீளமுடியாது

## மத்திய வங்கி ஆளுநர்



கொழும்பு, ஜூன் 18

தற்போது, ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை விரைவில் வழமைக்கு திருப்ப முடியாது - என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால்

15

# ‘தமிழ் ரைம்ஸ்’ இராசநாயகம் காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 18

லண்டனிலிருந்து வெளியான 'தமிழ் ரைம்ஸ்' சஞ்சிகையின் ஆசிரியர் பெ. இராசநாயகம் (வயது 84) நேற்று

15

# கச்சதீவு கைமாறியமையால் இலங்கை மீனவரே பாதிப்பு!

## இப்படி சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்

மன்னார், ஜூன் 18

இலங்கை - இந்திய நாடுகளுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட கச்சதீவு தொடர்பான ஒப்பந்தம் காரணமாக இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களை சேர்ந்த மீனவர்களே பெரும் இழப்புக்களை சந்தித்துள்ளனர் என்று அமைச்

15

# பட்டினியால் எவரும் வாடக்கூடாது; உணவு பாதுகாப்புக்கு புதிய திட்டம்!



## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 18

உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்து, எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற உணவு பாதுகாப்பு தொடர்பான குழுவின் கூட்டத்தில்

15

# இறுதி போரில் காணாமல்போனோரின் ஆட்கொணர்வு மனு தீர்ப்பு ஜூலை 1இல்

வவுனியா, ஜூன். 18

இறுதி யுத்தத்தில் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அனந்தி சசிதரன் உட்பட்டோரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி வழங்கப்படவுள்ளதாக சிரேஸ்ட சட்டத்தரணி இரட்ணவேல் தெரிவித்தார்.

நேற்று வவுனியா மேல் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு தொடர்பான தீர்ப்பு வழங்கப்படவிருந்த நிலையில் மீண்டும் திகதி இடப்பட்டதன் பின்னர் இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்-

யுத்தத்தின் கடைசிப்பகுதியில்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

யுத்தம் முடிந்து சில வாரங்கள்தான் இருக்கும். வவுனியாவில் ஒரு சில நண்பர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தபோது அங்கே இருந்த ஒருவர் சொன்னார், 'சீ, இவ்வளவு கெதியாக யுத்தத்தை முடிச்சிற்றாங்கள்' என்று.

எனக்கு தூக்கிவாரிப்போட்டது.

'ஏன் தம்பி, ஒரு தீர்வும் இல்லாமல் போராட்டம் முடிஞ்சிற்றுது எண்டு கவலைப்படுகின்றீரோ?' என்று கேட்டேன்.

அதற்கும் அவரிடம் சினம்தான் பதிலாக வந்தது. அவரைப் பொறுத்தவரை அதுபற்றியும் கவலை இருக்கவில்லை.

யுத்தம் முடிந்தபோது பலரை இழந்த கவலை பலருக்கு உண்டு. முப்பதாண்டு கால போராட்டம் எந்தத் தீர்வும் இன்றி முடிந்துவிட்டதே என்ற கவலை பலருக்கு உண்டு.

ஆனால் இவரோ, வெறுமனே யுத்தம் இவ்வளவு சீக்கிரமாக முடிந்திருக்கக்கூடாது என்று விரும்புகின்றாரே என்று எனக்குள் முறுகிக்கொண்டேன்.

அவர் அங்கிருந்து வெளியேறிய பின்னர் அவரைத் தெரிந்த நண்பர்களிடம் எனது விரக்தியைச் சொன்னேன். அப்போது அவர்கள்தான் சொன்னார்கள்:

'அவர் ஓர் அரச உத்தியோகத்ததர். வெளிக்கள அலுவலர். தனது வேலைக்காக வவுனியாவிலிருந்து தினமும் புலிகளின் பகுதிக்கு வேலைக்கு சென்று வருபவர். வவுனியாவில் தனது மோட்டார் சைக்கிளில் பெற்றோலை நிரப்பிக்கொண்டு புலிகளின் பகுதிக்குள் செல்வார். அங்கு அதனை முழுமையாக விற்றுவிட்டு, திரும்பி வருவதற்கு போதுமான பெற்றோலுடன் திரும்புவார். லீட்டர் எண்பது ரூபாவுக்கு வாங்குகின்ற பெற்றோலை அங்கு ஆயிரத்து ஐநூறு ரூபாவிற்கு விற்பார். தினமும் எத்தனை ஆயிரம் அவருக்கு கிடைத்திருக்கும்? அவர், யுத்தம் முடிந்ததை நினைத்து கவலைப்படுவதில் நியாயம் இருக்கின்றதுதானே' என்று.

ஒரு முகநூல் பதிவைப் பார்த்தேன். 'யுத்தம் நடந்தபோது அங்கங்கே திடீர் சுற்றிவளைப்பு தேடுதல்களை செய்வார்கள், புலிகளின் ஆயுதங்கள் அல்லது போராளிகள் இருப்பதாக தகவல் கிடைத்தால். அதேபோல இப்போது, யாழ்ப்பாணத்தை சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தினால், யாழ்ப்பாணத்திற்கு மூன்று மாதங்களுக்குத் தேவையான எரிபொருளை வீடுகளிலிருந்து மீட்கலாம்.'

இதுதான் அந்த முகநூல் பதிவு.

பிரதமர் ரணில் சில வாரங்களுக்கு முன்னர் ஓர் எச்சரிக்கை மணியடித்தார். எதிர்வரும் சில வாரங்களுக்கு எரிபொருளுக்கு முழுமையான தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அவரது எச்சரிகை வெளிவந்த சில மணி நேரங்களிலேயே பொற்றோல் நிலையங்களில் எரிபொருட்கள் முடிந்துவிட்டன. இப்போது, அடுத்த சில வாரங்களில் எரிபொருளுக்கான கியூக்கள் இல்லாமல் போய்விடும் என்று துறைசார்ந்த அமைச்சர் அறிவித்திருக்கின்றார்.

அவரது அறிவிப்பு, அதற்கு பின்னர் தாராளமாக எரிபொருள் கிடைக்கும் என்பதா அல்லது, எரிபொருளே இல்லாதபோது எப்படி கியூ இருக்கப்போகின்றது என்று சொல்கின்றாரா என்பது தெரியவில்லை.

இதேவேளை இன்னும் சிலரோ, இந்தியா கடனாகக் கொடுத்த பெற்றோல், டீசலை நாங்கள் காசுகொடுத்துத்தானே வாங்குகின்றோம். அதனை விற்று எங்களிடமிருந்து பெறும் காசில் டொலரை வாங்கி பெற்றோல், டீசலை வாங்கலாம்தானே என்று புலம்புவதும் கேட்கின்றது. அதிலும் சில படித்த, படிப்பிக்கின்ற புத்திஜீவிகளும் அடக்கம்.

இலங்கை ரூபாவை கொடுத்தால் டொலர்களை வழங்க எவராவது முன்வந்தால், இலங்கை தனது ரூபா நோட்டுக்களை தினமும் அச்சிட்டாவது வாங்கிவிடுமே.

நாட்டில் தாராளமாக டொலர் கையிருப்பில் இருந்தபோது - வங்கிகள் ஒவ்வொன்றிடமும் ஏராளமான டொலர்கள் கையிருப்பில் இருந்தபோது - ரூபாவை கொடுத்து டொலர்களை வாங்கமுடிந்தது. இப்போது இலங்கைக்கு - வங்கிகளுக்கு கிடைக்கின்ற டொலர் வருமானமும் முற்றாக நின்றுவிட்டபோது, எப்படி ரூபாவைக் கொடுத்து டொலர் வாங்குவது?

யாழ்ப்பாணத்தின் நகரம் ஒன்றிலுள்ள ஒரு வங்கிக்கிளையின் முகாமையாளர் சொன்னார், முன்னர் தினசரி எங்களிடம் வந்து 'வெஸ்ரேர்ண் யூனியன்' போன்ற நிறுவனங்களூடாக கிடைக்கின்ற பணத்தைப் பெறுவதற்காக நூற்றுக்கணக்கானவர்கள் வருவார்கள். இப்போதெல்லாம் ஒன்று இரண்டு பேர் வருவதே ஆச்சரியம்' என்று.

இலங்கையில் டொலருக்கு பற்றாக்குறை ஏற்பட்டதும், ஹவாலா என்ற சட்டவிரோத பணம் மாற்றுபவர்கள் வங்கி - அதுதான் 'வெஸ்ரேர்ண் யுனியன்' கொடுக்கும் பணத்தைவிட அதிகமாக கொடுப்பதால் அவர்களூடாகவே அனுப்பத் தொடங்கிவிட்டனர். அதுவே இன்று டொலருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட பிரதான காரணம் என்றார் அந்த வங்கி முகாமையாளர்.

டொலரில் வாங்கி, ரூபாவில் விற்பதால் அரசாங்கம் தொடர்ந்து எரிபொருளை இறக்குமதி செய்ய திண்டாடி வருகின்றது.

இதேவேளை, இந்த நெருக்கடிக்கு மத்தியில் நான் மேலே குறிப்பிட்டவிதத்தில், யுத்தத்தை வைத்து அவர் உழைத்தது போல, பெற்றோலை கியூவில் நின்று வாங்கி, வெளியே அதிக விலைக்கு விற்பதற்காக ஒரு கூட்டம் ஓடித்திரிகின்றது.

ஊர்க்குருவி, நேற்று பெற்றோல் பெறுவதற்காக கியூவில் நின்றபோது அருகே வந்த ஓர் இளைஞன் கேட்டான், 'அண்ணே, எவ்வளவு நேரம் கியூவிலை நிற்கப்போறீர்கள்? என்னோட வாங்கோ, எவ்வளவு வேணும் எண்டாலும் தாறன். லீட்டர் எழுநூறு ரூபாதான்' என்றான்.

அட, இனி சிலர், இந்த எரிபொருள் பிரச்னை தீர்ந்துவிடக்கூடாது என்று நினைக்கப்போகின்றார்கள் என்பது மட்டும் தெரிந்தது!

**- ஊர்க்குருவி**

# இந்திய, தமிழக அரசுகளுக்கு இந்து மாமன்றம் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

இக்கட்டான காலத்தில் தவிக்கும் இலங்கை மக்களுக்கு இந்திய பிரதமர், தமிழ்நாட்டு முதல்வர அனுப்பி வைத்த பொருட்களுக்காக நன்றி தெரிவித்துள்ளது அகில இலங்கை இந்து மாமன்றம். அத்துடன், இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில், இந்தியப் பிரதமரும் தமிழகத் தமிழர் கட்சிகளும் இலங்கை தமிழர்களின் நீண்ட காலப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து இந்து மாமன்றத்தின் உப தலைவர் ஆறு. திருமுருகன் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

மிக இக்கட்டான காலகட்டத்தில் இலங்கை வாழ் மக்கள் தவிக்கும் வேளையில் இந்தியப் பிரதமரும், தமிழ்நாட்டு முதல் வரும் அரிசி, மா போன்ற பொருட்களை அனுப்பி வைத்தமை மிகவும் நன்றிக்குரிய விடயமாகும்.

வறுமைக்கு உட்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் அவசர நிவாரணப் பொருள் கிடைத்துள்ளது. தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பல கோடி ரூபாய் செலவில் இந்தப் பொருட்களை அன்பளிப்பாக வழங்க முன்வந்தபோது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அதற்கான அனுமதியை வழங்கி எமது மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளமை பாராட்டுக்குரியது.

குறிப்பாக, வடக்கில் உள்ள யாழ். போதனா மருத்துவமனைக்கு அவசர மருந்துத் தேவைகளின் ஒரு பகுதியை துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டுள்ளமை மெச்சத்தக்க விடயமாகும்.

பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் கு. அண்ணாமலை யாழ்ப்பாணத்துக்கு நேரில் வருகை தந்து பல தரப்பினரையும் சந்தித்தமை சிறப்புக்குரியது. குறிப்பாக மருத்துவ உதவியோடு பலரின் வேண்டுதலாக உள்ள பலாலி - இந்திய விமான சேவை, கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட உள்ள செய்தி வரவேற்கத்தக்கதாகும்.

இந்தியப் பிரதமரும் தமிழகத் தமிழர் கட்சிகளும் இலங்கை தமிழர்களின் நீண்ட காலப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

கடந்காலங்களில் - குறிப்பாக, வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்த காலத்தில் எமது மக்களுக்காக இந்திய அரசு, தமிழக அரசு நீதியான தீர்வை உருவாக்கவில்லை என்ற கவலை மக்கள் மனிதில் நீடித்திருந்த நிலையிலும் தற்போது இந்திய அரசும் தமிழக அரசும் இலங்கை விவகாரத்தில் அக்கறை செலுத்தத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. மேலும், இந்த நாட்டு மக்கள் போரால் பட்ட துன்பத்துக்கு மேலாக இன்றைய பொருளாதார பிரச்னையால் மேலும் துன்பப்படுவதை அனைத்து உலகமும் அறியும். எனவே, வல்லமையும் வலிமையும் மிக்க பொருளாதார கட்டமைப்பைக் கொண்ட இந்திய தேசம் உற்ற உறவுத் தொடர்புடைய இலங்கை திருநாட்டை அழி விலிருந்து காப்பாற்றி சத்திய வழியில் நின்று தொடர்ந்து உதவ வேண்டும் என்று அன் போடு வேண்டுகிறோம் - என்றுள்ளது. (ஐ)

# மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படாது!

## அமைச்சர் காஞ்சன உறுதி

கொழும்பு, ஜூன் 18

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலைய நவீன மயப்படுத்தல் மற்றும் பராமரிப்பு வேலைத் திட்டத்துக்காக 18ஆம் திகதி சனிக்கிழமை முதல் 70 நாட்களுக்கு மூடப்படுகின்ற போதிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தற்போது நிலவும் மின் துண்டிக்கும் கால நேரம் அதிகரிக்கப்பட மாட்டாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

தற்போது காணப்படுகின்ற நீர் மூலமான மின் உற்பத்தி, உராய்வு எண்ணெய் மூலமான மின் உற்பத்தி, காற்றாலை மூலமான மின் உற்பத்தி மூலமான மின் உற்பத்தி வேலைத்திட்டங்கள் அந்தந்த மின் உற்பத்தி நிலையங்கள் ஊடாக தங்கு தடையின்றி நடைபெற்று வருகின்றது.

இதன் ஊடாக உற்பத்தி செய்யப்படுகின்ற மின் அலகுகள் நாட்டின் அன்றாட தேவைகளுக்கு போதுமானதாக இருப்பதாகவும், ஆகவே மின் துண்டிப்புக்கான கால நேரத்தை அதிகரிப்பதற்கு தேவை ஏற்படாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 2 ஆண்டுகளாக நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலைய பராமரிப்பு பணிகளுக்கான யோசனைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், சீனாவில் காணப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டங்கள் காரணமாக அந்நாட்டு பொறியியலாளர்கள் இலங்கைக்கு வருவதில் சிக்கல் காணப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், தற்போது நவீன மயப்படுத்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் மூடப்படுவதால் 300 மெகா வோட்ஸ் மின் உற்பத்தி நாட்டின் தேசிய மின் உற்பத்திக்கு கிடைக்கப் பெறாமல் போகும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில் மூன்று நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் காணப்படுவதுடன், அதில் ஒன்றை மாத்திரமே தற்போது நவீன மயப்படுத்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக மூடப்படுவதாகவும் தெரி விக்கப்படுகின்றது. (ஐ)

# ஜனாதிபதி - பிரதமர் பகைமை போட்டி போன்று மாறியுள்ளது!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, ஜூன் 18

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான பகைமை ஒரு போட்டிபோல மாறியுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்தவேளை காணப்பட்டது போன்ற நிலைமை தற்போது காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் இடையில் ஒருங்கிணைப்பு பரஸ்பர புரிந்துணர்வு ஐக்கியம் இல்லை என்பது தெளிவான விடயம். இதன்காரணமாகவே கோட்டாபய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முழுமையாக தோல்வியடைந்துள்ளது. நாட்டையும் அதன் மக்களையும் புரிந்துகொள்ளமுடியாத புதைகுழிக்குள் இட்டுச்சென்றுள்ளது.

ஜனாதிபதியும் பிரதமரும் தற்போது தனித்தனியாக அரசாங்க அதிகாரிகளை பிரதி நிதிகளை தொழில் சங்கத்தினரை சந்திப்பதை உத்தரவிடுவதை வழக்கமாக கொண்டுள் ளனர்.

தங்கள் செயல்பாடுகளில் அவர்கள் தோல்வியடைந்துள்ள போதிலும் ஒருவருக்கு ஒருவர் சவால் விடும் விதத்தில் அவர்கள் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர், ஒருவரை ஒருவர் தோற்கடிப்பதற்கான போட்டியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனரோ என எண்ணத் தோன்றுகின்றது. 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய பின்னர் ஜனாதிபதியும் பிரத மரும் இணங்கியுள்ளது போல அனைத்து கட்சி அரசாங்கத்தை அமைப்பதே யதார்த்தபூர்வமான தீர்வு என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ஐ)

Eelanadu ஈழநாடு
18.06.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# தளம்பல் வெளிவிவகாரக் கொள்கை?

ஐக்கிய நாடுகள் சபை, சீனாவின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாதென்று இலங்கை தெரிவித்திருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொண்டிருந்த, இலங்கையின் தூதுக் குழுவினர் இதனை வலியுறுத்தியிருக்கின்றனர். இதேவேளை, ஒரு சீனா என்னும் நிலைப்பாட்டில், இலங்கை தொடர்ந்தும் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றனர். இந்த ஆண்டு ஆரம்பத்தில், இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சீன வெளிவிவகார அமைச்சர் வோங் ஜி, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவில் முன்றாவது நாடுகள் தலையீடு செய்யக்கூடாதென்று தெரிவித்திருந்தார். இப்போது, ஐக்கிய நாடுகள் சபை, சீனாவின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யக்கூடாதென்று இலங்கை வலியுறுத்துகின்றது. இதனை எவ்வாறு புரிந்துகொள்வது?

கோட்டாபய ராஜபக்ஷ, அநுராதபுரம் - ருவான் வெலிசாயவில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டு உரையாற்றும்போது, தனது அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பில் பிரஸ்தாபித்திருந்தார். அதாவது, நாங்கள் நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையை பின்பற்றவுள்ளோம் - நாங்கள் ஒரு சிறிய நாடு எனவே, அதிகார தரப்புக்களின் போட்டிக்குள் வரவிரும்பவில்லையென்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், இப்போது, ‘ஒரு சீனா’ என்னும் சீன நிலைப்பாட்டுக்கு தாம் ஆதரவாக இருப்பதாகக் கூறியிருப்பதன் மூலம், இலங்கை அதிகார தரப்புக்களின் போட்டிக்குள் மூக்கை நுழைத்திருக்கின்றது. மேற்கு நாடுகளுக்கும் முக்கியமாக, அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்குள் கொழும்பு தேவையற்ற வகையில் மூக்கை நுழைக்கின்றது.

தாய்வானின் சுயாதீனத்தை, சீனா தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றது. தாய்வான் விடயத்தில் தலையீடு செய்தால், இறுதியில் மரணத்திலேயே முடிவுறும் என்று அண்மையில் சீன இராணுவத் தளபதி தெரிவித்திருந்தார். ஆனால், தாய்வானின் சுயாதீனத்துக்கு தொடர்ந்தும் அமெரிக்கா ஒத்துழைக்குமென்று, அமெரிக்க ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார். தாய்வானையும் உள்ளடக்கிய, சீனாவின் ஒரு சீனக் கொள்கையை அமெரிக்கா எதிர்த்து வருகின்றது. மேற்குலக நாடுகளும் தாய்வானின் சுயாதீனத்தை ஆதரித்து வருகின்றன. இந்த நிலையில், எதிர்காலத்தில் தாய்வானை அடிப்படையாகக் கொண்டு, ஆசியாவில், யுத்த முனையொன்று, திறக்கப்படலாமென்றும் கணிக்கப்படுகின்றது. அதாவது, தற்போது இடம்பெற்றுவரும் ரஷ்ய - உக்ரைன் யுத்தம் போன்று.

நிலைமைகள் இவ்வாறிருக்கின்ற போது, இலங்கையின் தூதுக் குழு, ஒரு சீனக் கொள்கையை ஆதரிப்பதாக கூறுவதை எந்த அடிப்படையில் புரிந்துகொள்வது? ஒருவேளை சீனா, மனித உரிமைகள் பேரவையில், தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளித்து வருவதை கணக்கில் கொண்டு, இதனைத் தெரிவித்திருக்கலாமா? அதுதான் விடயமென்றால் ஒரு சீனக் கொள்கையை ஆதரிப்பது தொடர்பில் பேசியிருக்க வேண்டியதில்லை. மொத்தத்தில் வெளிவிவகாரக் கொள்கை விடயத்திலும் கொழும்பு தெளிவாக இல்லை. தடுமாறிக் கொண்டிருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தாலும்கூட, வெளிவிவகார விடயங்களை கையாளும் பொறுப்பில், தோவ்வியடைந்த பீரிஸே இப்போதும் இருக்கின்றார்.

அமெரிக்க செனட்டின் வெளிவிவகார குழுவின் தலைவர் Bob Menendez அண்மையில், குவாட் நாடுகள் இலங்கையின் நெருக்கடிக்கு உதவ வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார். அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளே குவாட் நாடுகளாகும். ஆசியா நோக்கிய, அமெரிக்க மூலோபாய நகர்வில், குவாட் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும். ஆனால், தேவையற்ற வகையில் சீனாவின் விடயங்களுக்கு ஆதரவளிக்க முற்படுவதன் மூலம், மேற்குலக நாடுகளின், இலங்கைக்கான ஆதரவு கேள்விக்கு உள்ளாகலாம். ஆனால், இலங்கையின் வெளிவிவகார அணுமுறைகளை, தமிழ் தேசியர்கள் கூர்ந்து நோக்க வேண்டும். குவாட் நாடுகளை அணுகுவது தொடர்பிலும் தமிழ்த் தரப்புக்கள் சிந்திக்க வேண்டும்.

# ‘நீறு பூத்த நெருப்பாகவே இருக்கும்’ இந்திய உறவு!

**அலசுவது இராஜதந்திரி**




1987 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு யுத்தத் தின் போது இலங்கை இராணுவம் வடம ராட்சியில் ‘ஒப்ரேஷன் லிபரேஷன்’ நடவடிக்கையை ஆரம்பித்த போது இந்தியா ஆகாய மார்க்கமாக ‘ஒப்ரேஷன் பூமாலை’ என்று பெயரிடப் பட்ட மனிதாபிமான நடவடிக்கை யின் கீழ் உணவு, மருந்து பொட்டலங்களை யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் பாரசூட் மூலமாக தரை இறக்கியிருந்தது.

இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு அன்று வலுவான கண்டனம் தென்னிலங்கையிலிருந்து கிளம்பியிருந்தது. கொழும்பில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்துக்கு முன்பாக அன்று ஆர்ப்பாட்டம் நிகழ்த்தப்பட்டதோடு ஓர் இந்திய அதிருப்தியாளர் சிறிய தனியார் விமானத்தையும் ஏற்பாடு செய்து இந்திய உயர் ஸ்தானிகராலயத்துக்குள் ஆகாயத்திலிருந்து உணவு பொதிகளையும் போட்டிருந்தார்.

தற்போது இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு மன்னாரில் காற்றாடி மின்னாலை அமைப்பதற்கு இடம் ஒதுக்க முன்வந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்திய உயர் ஸ்தானிகராலயம் முன்பாக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

இந்தியா இலங்கைக்கு எந்த ஒரு வடிவத்தில் உதவ முன்வந்தாலும் தென்னிலங்கையர்களிடையே இந்தியா மீதான கசப்புணர்வு எப்போதும் இருந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலையைக் கையாள இந்தியா கடந்த ஜனவரி மாதம் முதல் இன்று வரை மூன்று பில்லியன் டொலர்களை கடன் அடிப்படையில் வழங்கி உதவியுள்ளது. இதுதவிர, நிவாரண உதவியாக உணவு, மருந்து பொருட்களையும் இந்தியா வழங்கியுள்ளது.

இலங்கை தற்போது பாரிய நெருக்கடியை பொருளாதார ரீதியாக எதிர்கொண்டிருப்பதையும் இந்தியா முடியுமானவரை இலங்கைக்கு உதவி வருவதை சீன, அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்தினர் பாராட்டியுள்ளனர்.

இத்தகைய பின்னணியில் இந்தியாவின் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியான முக்கியத்துவத்தை உணராதவர்களாக இந்தியாவை அதிருப்தியோடு பார்க்கும் போக்கையே தென்னிலங்கையர்கள் பலரும் கொண்டுள்ளனர்.

அதானி நிறுவன காற்றாலைகள் மூலமான மின் உற்பத்தியை மன்னாரில் ஆரம்பிக்கும் பட்சத்தில் அந்தக் காற்றாலைகள் சூழலை மாசுபடுத்தாத மின் உற்பத்தியாகவே அமைந்திருக்கும். எனவே, வெறுமனே தமது இந்திய வெறுப்புணர்வைக் காண்பிப்பதற்காக ஒரு சிறந்த மின் உற்பத்தித் திட்டத்தை எதிர்க்கிறோம் என்பதை தென்னிலங்கையின் இந்திய எதிர்பாளர்கள் அறிந்திராதிருப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை தனது சொந்த நலனில் அந்த நாடு அக்கறை கொண்டிருக்குமானால் வடக்கு - கிழக்கின் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்து அந்த மாகாணங்களில் ஒரு தமிழர் தாயகத்தையே உருவாக்கி பிராந்திய ரீதியாக தனது நலன்களை பாதுகாத்திருக்க முடியும்.

ஆனால், இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரு தனிநாடாக பிரிந்து விடக் கூடாது என்பதற்காக இந்தியா கொடுத்த விலை மிக அதிகமானதாகும்.

அத்துடன், வடக்கு - கிழக்கு பிரச்னைத் தீர்வுக்காக இலங்கைக்கு ஏற்றால்போல அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்ள மாகாண சபை முறைமையை அறிமுகப் படுத்தியதுகூட இந்தியாவேயாகும். இது தவிர இலங்கைப் பொருளாதாரத்தின் அடிநாதமாக இருப்பவர்கள்கூட இந்திய வம்சாவளித் தொழிலாளர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பின்னணியில் அதானி நிறுவன காற்றாலை தொடர்பாக இந்தியாவுக்கு எதிராக கூச்சல் போடும் கும்பலின் போக்கு வேடிக்கையானதாகவே இருக்கின்றது.


அயல் நாடாகவும் கூப்பிட்ட குரலுக்கு முதலில் செவிசாய்க்கின்ற நாடாகவும் இருக்கின்ற இந்தியாமீது அதிருப்தி கொள்ளும் தென்னிலங்கையர்கள், இலங்கையை ஏறத்தாள ஏப்பம் விட்டுள்ள சீனா குறித்து மௌனம் சாதிப்பது என்ன காரணத்துக்காக என்பதை அறிய முடியாதுள்ளது.

இலங்கையில் குறிப்பாக தலைநகர் கொழும்பில் தனக்கென்றே 270 ஹெக்ரெயர்கள் நிலப்பரப்பில் கடலிலே பிரமாண்டமான நிலப்பரப்பை சீனா உருவாக்கியுள்ளது.

அத்துடன், இலங்கையின் தென் முனையில் மத்தள விமான நிலையத்தையும் சீனா உருவாக்கியுள்ளதோடு அதனை சர்வதேச விமான நிலையமாக அறிவித்திருந்தாலும் தெற்காசிய பிராந்தியத்தில் ஒரு பதற்றமான சூழல் உருவாகும் பட்சத்தில் சீனா மத்தள விமான தளத்தை இராணுவ தேவைகளுக்காகவும் பயன்படுத்த முடியும்.

எனவே, இந்தியா “ஆபத்பாந்தவனாக“ இலங்கைக்கு தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் காலமறிந்து உதவி செய்தாலும் அதானி மின்னாலை விடயத்தில் இந்திய அதிருப்தியாளர்கள் இந்திய உயர் ஸ்தானிகராலயம் முன்பாக கூச்சலிடுவது இந்தியாவுடனான உறவு ஒரு நீறு பூத்த நெருப்பாக தென்னிலங்கையில் அநேகர் மத்தியில் நிலவுவதையே உணர முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு






**மேடம்**
நீங்கள் தொழிலை விரிவுபடுத்த மேற்கொண்ட முயற்சி அனுகூலமாகும்.பணியிடப் பிரச்னையை சரி செய்வீர்கள். நிதி நிலை உயரும்.தொழிலில் புதிய திட்டத்தை செயல்படுத்துவீர்கள்.

**இடபம்**
உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும்.இன்று நீங்கள் நினைத்த செயலை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சி கூடும்.தொழிலில் சிறு, சிறு தடைகளை தாண்டி வெற்றி பெறுவீர்கள்.

**மிதுனம்**
உங்கள் முயற்சியில் பின்னடைவு உண்டாகும். இனம்புரியாத குழப்பம் ஏற்படும்.நிதானம் தேவை. புதிய முயற்சிகளில் தாமதம் ஏற்படும். விழிப்புணர்வு அவசியம் வேண்டும்.

**கடகம்**
உறவுகளிடம் ஏற்பட்ட மனஉளைச்சல் சரியாகும். நினைத்த செயலில் லாபம் காண்பீர்கள். வாழ்க்கைத் துணையின் வழிகாட்டுதலால் உங்களுடைய நேற்றைய கனவு நிறைவேறும்.

**சிம்மம்**
பகைவர்கள் விலகிச் செல்வர்.உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். உற்சாகத்துடன் தொழிலில் ஈடுபடுவீர்கள். உங்கள் செயலில் இருந்த தேக்கம் விலகும். எதிர்பார்த்தவற்றில் லாபம் காண்பீர்கள்.

**கன்னி**
முயற்சியில் தடைகளை சந்தித்தாலும் வெல்வீர்கள். விலகிச்சென்ற உறவினர்கள் தேடி வருவர். உங்கள் செல்வாக்கு உயரும். உங்கள் கையை விட்டுப் போன ஒப்பந்தம் இன்று உங்களிடம் வந்து சேரும்.

**துலாம்**
மனதில் ஆசைகள் அதிகரிக்கும். உங்களுடைய தேவைகளில் ஒன்று நிறைவேறும். அனைத்து விஷயங்களிலும் எச்சரிக்கை வேண்டும். இல்லையெனில் சங்கடங்களை சந்திப்பீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் செல்வாக்கு உயரும். பெரியோரின் ஆதரவுடன் நினைத்ததை சாதிப்பீர்கள்.குடும்பத்தில் சுபச்செலவு ஏற்படும். மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. உங்களுடைய திறமை வெளிப்படும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். எதிர் பார்த்த வரவுகள் வந்து சேரும். குழப்பங்கள் விலகும். மற்றவர்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். சிரமங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

**மகரம்**
சங்கடம் உண்டாகி குழப்பத்தில் மூழ்குவீர்கள். உங்கள் மனதில் தடுமாற்றம் ஏற்பட்டு செயல்களைத் தள்ளிப் போடுவீர்கள். தொழிலில் நீங்கள் எதிர் பார்த்த லாப நிலையைக் காண முடியாமல் போகும்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் வெற்றியாகும். உங்கள் நிதிநிலை உயரும்.பழைய முதலீட்டில் இருந்து லாபம் கிடைக்கும். பொன் பொருள் சேர்க்கை அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த வரவு வந்து சேரும்.

**மீனம்**
அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணியிடங்களில் இருந்து வந்த நெருக்கடிகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.

# நளினி, ரவிச்சந்திரன் விடுதலைகோரி தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி!

சென்னை, ஜூன் 18

தமிழக அமைச்சரவை தீர்மானத்தின்படி தங்களை விடுதலை செய்யக்கோரி நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதிகளாக உள்ள நளினி, முருகன் உள்பட ஏழு பேரையும் விடுதலை செய்ய 2018 செப்ரெம்பர் 9ஆம் திகதி தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி, 2018 செப்ரெம்பர் 11ஆம் திகதி ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அரசு அனுப்பிய தீர்மானத்தில் ஆளுநர் தாமதிப்பதால், அவரது ஒப்புதலுக்கு காத்திருக்காமல் தன்னை விடுதலை செய்யக்கோரி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இதேபோல், இந்த வழக்கில் தண்டனை அனுபவித்துவரும் ரவிச்சந்திரனும் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது, தமிழக அரசு தரப்பில், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி விடுதலை செய்வதற்கு ஆளுநரின் கையெழுத்து அவசியம். உயர் நீதிமன்றமே கூட பரிசீலிக்கலாம் என்று வாதிடப்பட்டிருந்தது.

நளினி தரப்பில், அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமாக ஆளுநர் செயல்பட்டிருந்தால் அதை சட்டவிரோதம் என உயர் நீதிமன்றம் அறிவிக்கலாம். ஆளுநர் எந்த முடிவும் எடுக்காமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியதால், மீண்டும் ஆளுநருக்கு அனுப்பக்கூடாது என்று வாதிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், தீர்ப்புக்காக ஒத்திவைத்திருந்தது.

இந்த வழக்கில் நேற்று வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்த, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி முனீஷ்வர் நாத் பண்டாரி, நீதிபதி மாலா ஆகியோர் அடங்கிய அமர்வு, பேரறிவாளனை, உச்ச நீதிமன்றம் தனது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி விடுவித்ததைப் போல, உயர் நீதிமன்றம் விடுவிக்க முடியாது எனக்கூறி நளினி, ரவிச்சந்திரன் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். (ஐ)

# "சாதி என்ற தீயை ஊதிக்கொண்டிருந்தால் எதிர்கால சமுதாயத்தை அழித்துவிடும்"

சென்னை, ஜூன் 18

"இன்னமும் சாதி என்னும் தீயை அணைக்காமல், ஊதிக்கொண்டே இருந்தால், எதிர்கால சமுதாயத்தை அழித்துவிடும்" என்று கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி கவலை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மக்கள் நீதி மய்யம் நேற்று தனது ருவிட்டர் பக்கத்தில், "தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகேயுள்ள குளத்தூரில் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவரிடம் உதவி தலைமை ஆசிரியை சாதி ரீதியாகப் பேசியமை அதிர்ச்சி அளிக்கிறது.

சாதிப்பற்றுக்கூடாது என்று மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டிய ஆசிரியர்களே, சாதி வெறியைத் தூண்டுவதுபோல பேசுவது ஏற்கத்தக்கதல்ல. பள்ளிகளில் பரவும் சாஹதீ"... கற்றுக்கொடுக்க வேண்டியவரே கெட்டுப் போகச் செய்யலாமா?

இன்னமும் சாதி என்னும் தீயை அணைக்காமல், ஊதிக்கொண்டே இருந்தால், எதிர்கால சமுதாயத்தை அழித்துவிடும். இது போன்ற சம்பவங்கள் தொடராமல் இருக்க கடும் நடவடிக்கைகள் எடுப்பதுடன் ஆசிரியர், பெற்றோர், மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அரசு முன்வர வேண்டும்" என்று பதிவிட்டுள்ளது. (ஐ)

# 80 வீத வாக்குறுதிகள் நிறைவேற்றம்! மீதி 20 வீதம் விரைவில் நிறைவேறும்!

## மு. க. ஸ்டாலின் உறுதி

சென்னை, ஜூன் 18

"தி. மு. க. ஆட்சிக்கு வந்தபோது என்ன நிலை, ஒருபக்கம் கொரோனா என்ற ஒரு கொடிய நோய், இன்னொரு பக்கம் நிதிப்பற்றாக்குறை, கஜானா காலியாக இருந்த ஒரு கொடுமை, இதை எல்லாம் சமாளித்து 80 சதவீதத்திற்கு மேல் தேர்தல் நேரத்தில் தந்த வாக்குறுதிகளை காப்பாற்றியிருக்கிறோம்", என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் தி. மு. க. கட்சியின் நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தேர்தல் நேரத்தில் என்னென்ன வாக்குறுதிகளை, உறுதிமொழிகளை மக்களிடத்தில் எடுத்து கூறினோமோ,அவைகள் ஓரளவுக்கு ஏன் 80 சதவீதத்திற்கு மேல் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.. இன்னும் 20 சதவீதம் இருக்கிறது, நான் இல்லையென்று கூறவில்லை.

தி. மு. க. ஆட்சிக்கு வந்தபோது, ஒருபக்கம் கொரோனா என்ற ஒரு கொடிய நோய், இன்னொரு பக்கம் நிதிப்பற்றாக்குறை, கஜானா காலியாக இருந்த ஒரு கொடுமை, இதையெல்லாம் சமாளித்து 80 சதவீதத்திற்கு மேல் தேர்தல் நேரத்தில் தந்த வாக்குறுதிகளை காப்பாற்றியிருக்கிறோம்.

மிச்சம் இருக்கக்கூடிய அந்த 20 சதவீதத்தையும், நான் உறுதியோடு கூறுகிறேன், அதையும் உறுதியாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய நான் காப்பாற்றுவேன்.

ஏதோ பொற்கிழி கொடுத்துவிட்டோம், நீங்கள் சென்று ஓய்வெடுங்கள் என்பதற்காக அது வழங்கப்படவில்லை. இன்னும் பல பணிகளை நீங்கள் செய்ய வேண்டும். ஊக்கப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும்தான் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெறவுள்ளது" என்று அவர் கூறினார். (ஐ)

# கொரோனா தொற்றுக்கு பின்னர் தமிழகத்தில் புற்றுநோய் உயர்வு!

சென்னை, ஜூன் 18

நாடு முழுவதும் தொற்றா நோய்களால் 63 சதவீதம் பேர் உயிரிழக்கின்றனர். இதில் அதிகபட்சமாக 9 சதவீதம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கின்றனர்.

இந்நிலையில், தற்போது கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு தமிழகத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது.இதில், சிறுவர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. பெரும்பாலான சிறுவர்கள் இத்தப்புற்றுநோயால் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் கடந்த 2017 முதல் ஒவ்வோர் ஆண்டும் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 0.1 சதவீதம் அதிகரித்து வருவதாகவும், தற்போதைய சூழலில் மருத்துவமனைகளில் புற்றுநோய் பரிசோதனையை அதிகப்படுத்தி இருப்பதால், கடந்த ஆண்டைவிட நடப்பு ஆண்டில் புற்றுநோய் பாதிப்பு உயர வாய்ப்பு உள்ளது எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



# சிறுவர்கள் நால்வர் உட்பட 7 பேர் தமிழ்நாட்டில் தஞ்சம்

கொழும்பு, ஜூன் 18

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக மேலும் ஏழு பேர் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.

தனுஷ்கோடி அடுத்த ஒன்றாம் தீடை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஒரு ஆண், இரண்டு பெண், 4 சிறுவர்கள் உட்பட 7 பேர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தீடைப் பகுதியில் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்துள்ளதாக மரைன் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் விரைந்து சென்ற பொலிஸார், அவர்களை மீட்டு விசாரணைக்காக மண்டபம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இதையடுத்து விசாரணை முடிந்த பின்னர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் அவரது தங்க வைக்கப்பட உள்ளனர்.

இவ்வாறு தஞ்சமடைந்துள்ளவர்கள் வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2 குடும்பங்களை சேர்ந்த 7 பேர் என தெரிய வந்துள்ளது. (அ)

# அறுவடை கிடைத்தால் உணவுப் பஞ்சம் வராது!

## விவசாய பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 18**

**சிறுபோகத்தில் வழமையாகப் பயிரிடப்படும் ஐந்து இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில், தற்போது 4 இலட்சத்து 75 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.**

அதன் அறுவடை கிடைக்கப்பெற்ற பின்னர், எதிர்காலத்தில் நாட்டில் அரிசித் தட்டுப்பாடு அல்லது உணவு நெருக்கடி ஏற்படாது என விவசாய பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் தற்போதும் சிறுபோகத்தில் பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பை உரியவாறு அடையாளம் கண்டு அவற்றுக்கு உரத்தை வழங்குவதற்கான முறைமை தயாரிக்கப்படவில்லை என ஒன்றிணைந்த விவசாய சங்கத்தின் தலைவர் உபாலி ஏக்கநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், விவசாய அமைச்சர் கூறுவதுபோன்று மரவள்ளி பயிரிடல் என்பது இலங்கையில் 1970 முதல் சொல்லப்படுகின்ற கதையாகும் என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்கள் வினவியபோது பதிலளித்த விவசாய பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா, சிறுபோகத்துக்கு அவசியமான உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது நிறைவடைந்துள்ளன என்று குறிப்பிட்டார். (அ)

# இலங்கைக்கு தென்கொரியா தொடர்ந்தும் ஒத்துழைக்கும்!

கொழும்பு, ஜூன் 18

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுக்காண இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க தமது நாடு தயாராக உள்ளதாக இலங்கைக்கான தென் கொரியத் தூதுவர் ஜீயோன்ங் வூன்ஜின் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் தென் கொரியாவுக்கிடையில் 45 ஆண்டு கால இராஜதந்திர தொடர்புகளை இதன்போது நினைவு கூர்ந்த ஜனாதிபதி, தென் கொரிய அரசாங்கம் இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கி வரும் ஒத்துழைப்புக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அத்தோடு, அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள யூன் சுக் யேலோ மற்றும் அவரது கட்சிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதன்போது வாழ்த்து தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக ஜனாதிபதி தூதுவருக்கு தெளிவுபடுத்தினார்.

இந்த நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு தென் கொரியாவின் ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, இலங்கையிலுள்ள இளைஞர்களுக்கு தென் கொரியாவில் வழங்கப்படும் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்குமாறும், தொழிற்துறை முதலீடுகளை ஊக்குவிக்குமதறும் ஜனாதிபதி இதன் போது கேட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# உள்நாட்டு, வெளிநாட்டு பணத்துடன் 4 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 18

ஒரு கோடியே 86 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா உள்நாட்டு பணத்தையும், 4 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணத்தையும் வைத்திருந்த நான்கு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை உள்ளிட்ட 3 இடங்களில் வைத்து, பொலிஸ் விசேட அதிரப்படையினரால் நேற்று முன்தினம் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

புறக்கோட்டை - டெனெட் சந்தைக் கட்டடத் தொகுதி, மாளிகாவத்தை - நூரானியா சந்தி, கொழும்பு 10 முதலான இடங்களில் உள்ள 3 தங்க ஆபரண விற்பனை நிலையங்களைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, குறித்த பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், வெள்ளவத்தை, மருதானை மற்றும் புதுக்கடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# பெற்றோல் இறக்குமதிக்கான கடன் சான்று பத்திரம் திறப்பு

கொழும்பு, ஜூன் 18

3 இலட்சம் பீப்பாய்கள் ஒக்ரேன் 92 ரக பெற்றோலை இறக்குமதி செய்வதற்கான கடன் சான்றுப் பத்திரம் திறக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 42.6 மில்லியன் அமெரிக்க டொலருக்கான கடன் கடிதம் மக்கள் வங்கியினால் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடன் கடிதங்களை விரைவில் திறக்க முடிந்தால் வார இறுதியில் பெற்றோலைச் சந்தைக்கு விநியோகிக்க முடியும் என நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார். (அ)



# எரிபொருள் இல்லாதபோதும் மல்லாவியில் நீண்ட வரிசை!

முல்லைத்தீவு, ஜூன் 18

மல்லாவிப் பகுதியில் துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என்ற தகவலுக்கமைய நேற்றுக் காலை முதல் நீண்ட வரிசையைக் காண முடிந்தது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் இல்லை என்ற பதாகை காட்சிப்படுத்தப்படிருந்தது.

இதேவேளை, மல்லாவி ஒட்டறுத்தகுளம் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற 6600 லீற்றர் மண்ணெண்ணெய் தலா 200 ரூபாய்க்கு விநியோகம் செய்யப்பட்டது. குடும்ப பங்கீட்டு அட் டைக்கே மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்றது. (அ)

# மாத்தறையில் 9 மாதக் குழந்தையை விஷம் வைத்து கொலை செய்த தாய்!

கொழும்பு, ஜூன் 18

கணவன் தொழில் தேடிச் சென்ற வேளையில் மனைவி தனது 9 மாதக் குழந்தைக்கு விஷம் வைத்து கொலை செய்துள்ள சம்பவம் மாத்தறை மாவட்டத்தில் மாலிம்படை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த குழந்தை கந்தஹேன, அல்கிரிய, தெலிஜ்ஜவில பகுதியைச் சேர்ந்த வீரதுங்க ஆராச்சிகே பசிது பிரபாத் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவத்தின்போது, வீட்டில் இருந்த குழந்தையும், 3 வயது குழந்தையும் அழும் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டில் வசிக்கும் பாட்டி வந்து பார்த்த போதுதான் இந்தக் கொடூரம் பற்றிய தகவல் தெரியவந்தது.

இதன்போது, குறித்த குழந்தை ஓட்டோவில் அக்குரஸ்ஸ அரச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், 9 மாதக் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டது என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

குழந்தைக்கு விஷம் கலந்த ஏதேனும் கொடுத்துவிட்டு தாய் தப்பிச் சென்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலும், தனது மூத்த குழந்தை மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார் எனவும், தான் செய்த குற்றத்துக்கு மன்னிப்புக் கிடையாது எனவும் அந்தப் பெண் எழுதி வைத்திருந்த கடிதமொன்றையும் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

22 வயதுடைய குறித்த பெண்ணைக் கைதுசெய்ய பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இறந்த குழந்தையின் மரணம் குறித்து மரண விசாரணை நடத்தப்பட்டுள்ளது. நீதிவானின் உத்தரவின் பேரில் மரணத்துக்கான சரியான காரணத்தைக் கண்டறிய பிரேத பரிசோதனை நடத்தப் படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பஞ்சம் ஏற்படாது அஞ்சவேண்டாம்!

## சொல்கிறார் அமைச்சர் அமரவீர



**கொழும்பு, ஜூன் 18**

**நாட்டில் தற்போது பரந்தளவிலான விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் பஞ்சம் ஏற்படாது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு மாதத்துக்கு 500 தொடக்கம் 1000 மெற்றிக் தொன் அரிசியே விநியோகிக்கப்படுகிறது. அதனை 10 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரிக்க ஆலோசனை வழங்கியுள்ளோம்.

எனவே, தேவைக்கு ஏற்ப சதொச மற்றும் ஏனைய பல் பொருள் அங்காடிகளில் அரிசியை பெற்றுக்கொள்ள முடியும்.

தான் அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு முன்னர், 248,000 ஹெக்ரேயர் நிலப்பரப்பே விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது 470,000 ஹெக்ரேயர் நிலப்பரப்பு விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது.

எனவே நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது. மக்கள் வீணாக அச்சப்படத் தேவையில்லை-என்றார். (அ)

# வீடு புகுந்து ஆறு பேருக்கு வாள்வெட்டு யாழ். பொலிஸாரிடம் மூவர் சிக்கினர்!

வடமராட்சி, ஜூன் 18

பருத்தித்துறை துன்னாலை -மாக்கிராய் பகுதியில் நள்ளிரவுவேளை வீடுடைத்து உள்நுழைந்து அங்கிருந்த 6 பேருக்கு பெருங்காயங்களை விளைவித்து 12 தங்கப் பவுண் நகைகளைக் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் கொள்ளையிட்ட நகைகளில் ஐந்தரைப் பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டவுடன் அவற்றை உடமையில் வைத்திருந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் வீட்டுக் கதவினை உடைத்து வாள்களுடன் உள்நுழைந்த 6 பேர் கொண்ட கும்பல் அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களை சேதப்படுத்தியதுடன் வீட்டிலிருந்த 6 பேருக்கு பெருங்காயங்களை ஏற்படுத்தியதுடன் 12 தங்கப் பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பித்தது.

சம்பவத்தையடுத்து படுகாயமடைந்தவர்கள் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் விஜித் லியனகேயின் பணிப்புக்கு அமைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

பலாலி பகுதியில் வைத்து 36 வயதுடைய ஒருவரும் முடவத்தையைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டனர். அவரின் சகோதரர் தப்பித்துள்ளார்.

மேலும் ஒர் ஆணும் கொள்ளையிட்ட நகைகளை உடைமையில் வைத்திருந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். ஏனைய மூவர் தேடப்பட்டு வருகின்றனர்.

சந்தேக நபர்கள் பயன்படுத்திய வாள்களும் கைப்பற்றப்பட்டன.

மேலதிக நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்கள் நால்வரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (அ-02)

# நீர் பாவனையாளர்களிடமிருந்து 7,500 மில்லியன் ரூபா நிலுவையில்

கொழும்பு, ஜூன் 18

நாடளாவிய ரீதியிலுள்ள நீர் பாவனையாளர்கள் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 7500 மில்லியன் ரூபா கட்டணமாக செலுத்தவேண்டியுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் உள்ளிட்டவைகளே மேற்படி கட்டணத்தை செலுத்துவதிலிருந்து தவறியுள்ளதாக ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றுள்ள விசேட பேச்சுவார்த்தையின்போது அந்த சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

நீர்வழங்கல் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது நிர்மாணப் பணிகள் நிறைவடையும் நிலையிலுள்ள சிறிய மற்றும் பாரிய குடிதண்ணீர்த் திட்டங்களை விரைவில் நிறைவு செய்து மக்களின் பயன்பாட்டுக்கு கையளிக்குமாறு ஜனாதிபதி குறித்த அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிதண்ணீர்த் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

அதற்கிணங்க உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதியின் கீழ் தற்போது 2337 பாரிய, சிறு மற்றும் நடுத்தர அளவிலான குடிதண்ணீர்த் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் இதன்போது தெளிவுபடுத்தியுள்ளனர்.

2022 ஏப்ரல் மாதம் வரை வீடுகள், வர்த்தக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் உட்பட பாவனையாளர்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டிய தொகை சுமார் 7,500 மில்லியன் ரூபாவாகுமென இதன்போது அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# மேல் மாகாணத்தில் 50 வீதத்தால் அதிகரித்துள்ளது டெங்கு தாக்கம்

கொழும்பு, ஜூன் 18

மேல் மாகாணத்தில் டெங்கு நோயாளர்களின் எண் ணிக்கை 50 வீதத்தால் அதிகரித்துள்ளதாக சுகாதார நுளம்பியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் நஜித் சுமனசேன தெரிவித்துள்ளார்.

மேலும், நாடளாவிய ரீதியில் நுளம்பு பெருகும் பிரிட்டோ சுட்டெண் தற்போது 20 ஐ தாண்டியுள்ளது. இந்த நிலைமை டெங்கு தொற்றுநோய்க்கு வழிவகுக்கும் முக்கிய காரணியாக குறிப்பிடப்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டடங்களில் காணப்படும் கொங்கிரீட், நுளம்பு புகள் உற்பத்தியாகும் இடமாக மாறியுள்ளதாகவும் அவர் மேலும் வலியுறுத்தினார். (அ)

# மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையம் முற்றுகை; பதுக்கப்பட்ட எரிபொருள் மக்களுக்கு விநியோகம்

மன்னார், ஜூன் 18

திருக்கேதீஸ்வரம் சந்தியில் அமைந்துள்ள லங்கா எரிபொருள் விற்பனை நிலையத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெற்றோல் மற்றும் டீசல் என்பன மன்னார் மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, திருக்கேதீஸ்வரம் சந்தியில் அமைந்துள்ள லங்கா எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களை கையிருப்பில் வைத்துக் கொண்டு மக்களுக்கு வழங்காது பதுக்கி வைத்திருப்பதாக மக்கள் மன்னார் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக மன்னார் மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள்




இணைந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு குறித்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது எரிபொருள் நிலையத்தில் பெற்றோல், டீசல் மற்றும் சுப்பர் பெற்றோல் பதுக்கி வைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

2,047 லீற்றர் பெற்றோல், 3,153 லீற்றர் டீசல், 3,196 லீற்றர் சுப்பர் பெற்றோல் ஆகியவை பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த எரிபொருட்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் உடனடியாக மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (அ)

# துறைமுக ஊழியர்களுக்கு மிக விலை உயர்ந்த உணவு!

கொழும்பு, ஜூன் 18

துறைமுகம் வழங்கும் உணவில் 45 சதவீதம் கஜூவுக்கு செலவிடப்படுவதாகவும், அதற்கு பதிலாக மாற்று உணவை கண்டறியுமாறும் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்துக்கு அமைச்சர் நேற்றுமுன்தினம் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, உணவில் விலை உயர்ந்த கஜூ பயன்படுத்துவது தெரிய வந்தது.

துறைமுக சமையலறைகளில் ஒரு நாளைக்கு 5000 மதிய உணவுகளும் 3500 இரவு உணவுகளும் தயாரிக்கப்படுவதாகவும், ஒரு வேளை உணவு 450 ரூபாவை நெருங்குவதாகவும் அமைச்சரிடம் துறைமுக தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டின.

1976 ஆம் ஆண்டு கட்டப்பட்ட துறைமுக சமையல் கூடம் அதன் பின்னர் பௌதீக ரீதியாக புனரமைக்கப்படவில்லை எனவும் துறைமுக சமயலறை ஊழியர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

துறைமுக சமயலறையில் உள்ள எரிவாயு அடுப்புகள் மிகவும் பழமையானது எனவும் அதனால் எரிவாயு விரயமாகின்றது எனவும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

துறைமுக சமையலறையில் 169 பணியாளர்கள் இருந்த போதிலும் அவர்களுக்கு உரிய சுகாதார வசதிகள் இல்லை என்பதை அமைச்சர் கண்டறிந்து அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு துறைமுக திணைக்கள பிரதித் தலைவரிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்தார். (அ)

# அருகிலுள்ள பாடசாலைக்கு ஆசிரியர்கள் செல்லமுடியும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

**ஆசிரியர்களை தமது வீடுகளுக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளுக்கு சேவைகளில் ஈடுபடுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.**

போக்குவரத்து பிரச்னைகளை தவிர்த்துக்கொள்ளும் வகையில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை செலுப்படியாகும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சின் பணிப்பாளர்கள் மற்றும் வலய கல்விப் பணிப்பாளர்களுக்கு இதற்கான அதிகாரத்தை வழங்கும் வகையில், கல்வி அமைச்சின் செயலாளரினால் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களை தமது வீடுகளுக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளுக்கு சேவைக்கு அமர்த்தும்போது, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுமாறும் கல்வி அமைச்சு, அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது. (அ)




# நெடுங்கேணியில் மரக் கடத்தல் வன அதிகாரிகளால் முறியடிப்பு

வவுனியா, ஜூன் 18

நெடுங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நைனாமடு காட்டு பகுதியில் மர கடத்தல் முயற்சி வட்டார வனவள அதிகாரிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நைனாமடுவில் ஒதுக்கப்பட்ட காட்டுப்பகுதியில் நேற்று முன் தினம் இரவு மரங்கள் வெட்டி கடத்தப்படுவதாக வட்டார வனவள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய வட்டார வனவள அதிகாரி சமரதுங்க தலைமையிலான உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட தேடுதலில் 6 லட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் காட்டுப்பகுதியில் வெட்டப்பட்டு ஏற்றுவதற்கு தயாராக காணப்பட்டன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் வட்டார வனவள அலுவலக அதிகாரி களின் வருகையையடுத்து அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இந்நிலையில் மரக் குற்றிகளை வட்டார வனவள அலுவலகத்திற்கு ஏற்றிச் சென்றுள்ளனர். இது குறித்து மேலதிக விசாரணைகள் நெடுங்கேணி பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்டுள்ளனர். (அ)

# பேராதனை பல்கலை மாணவர் 4 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 18

பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின்போது பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின்போது மைதானத்துக்குள் நுழையும் விளையாட்டு இரசிகர்களின் அனுமதிச் சீட்டுகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மதுபோதையில் வந்த குழுவொன்று பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கடுமையான வார்த்தைகளால் அச்சுறுத்தி ஆவேசமாகவும், கலவரமாகவும் நடந்துகொண்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிலைமையைக் கட்டுப்படுத்த முற்பட்ட வேளையில் தமது கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் நால்வரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் 4ஆம் வருடத்தில் கல்வி பயிலும் 3 மாணவர்களும், மாணவி ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் குருநாகல், கொஸ்லந்த மற்றும் கெக்கிராவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் மேலும் கூறினர். (அ)

## நெருக்கடியால் அரசியல் கைதிகளும் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 18

பொருளாதார நெருக்கடி காரணமாக அரசியல்கைதிகளும் பல்வேறு பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றனர் என்று அரசியல் கைதியொருவர் தெரிவித்தார்.

வழக்கொன்றிற்காக நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு மூன்று அரசியல் கைதிகள் ஆயுதம் தாங்கிய காவலர்கள் சகிதம் பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் வழக்கு நிறைவின் பின்னர் அவர்களை மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும் வாகனத்தில் ஏற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடியால் அரசியல் கைதிகளும் பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வருவதனால் தமிழ் மக்கள் அனைவரும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டும்-என்றார். (அ)

# மக்களின் போசாக்கு குறித்து ஆய்வு நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 18

மக்களின் போசாக்கு நிலை தொடர்பில் ஆய்வு நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருவதாக பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டச்சத்து நிபுணர் மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, உணவு நெருக்கடியினால் மக்களின் போசாக்கு நிலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி குறித்து துல்லியமான தரவுகளை பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டார்.

கடந்த டிசெம்பரில் நடத்தப்பட்ட ஆய்வில், நாட்டில் குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் ஊட்டச்சத்து அளவு படிப்படியாக குறைவடைந்து வருகின்றமை தெரியவந்துள்ளது. (அ)



# காலி மாவட்ட பாடசாலைக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி

வடமராட்சி, ஜூன்17

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் தென் மாகாணம் - காலி மாவட்டத்தில் உள்ள சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்திற்கு 100000 ரூபா நிதி உதவி வழங்கப்பட்டது.

காலி மாவட்டம் - உடுகம கல்வி வலயத்தை சார்ந்த கஸ்ட பிரதேசத்தை உடைய தலங்கனாவில் அமைந்துள்ள தமிழ் மொழிப் பாடசாலையான சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படும் ஆலயத்தின் பணிக்காக 100000 ரூபா நிதியை கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரம தொண்டர்களுடன் நேரடியாக சென்று பாடசாலை முதல்வரிடம் கடந்த புதன்கிழமை கையளித்தார்.

சைவ சமயத்தை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளே இப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். வழிபடுவதற்கு எந்தவித ஆலயமும் இல்லாத நிலையில் பாடசாலையில் அமைக்கப்படும் ஆலயத்திற்கே இவ் நிதி உதவி வழங்கப்பட்டது.

ஆலயத்திற்கான மேலதிக உதவிகளையும் செய்து தருவதாகவும் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளால் பாடசாலை நிர்வாகத்திடம் கூறப்பட்டது. (அ-02)

# வெள்ளிக்கிழமை விடுமுறையில் சுற்றாடலை சுத்தம் செய்யுங்கள்

## அரச மருத்துவர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 18

வெள்ளிக்கிழமை விடுமுறையை வீட்டுத் தோட்டம் மற்றும் சுற்றுச்சூழலை சுத்தம் செய்ய பயன்படுத்துமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் மக்களை கேட்டுள்ளது.

டெங்கு தொற்று மற்றும் நுளம்பு பெருகும் இடங்கள் அதிகரித்து வருவதால், இவ்வாறு சுற்றுச்சூழலை சுத்தம் செய்யுமாறு அந்தச் சங்கத்தின் உறுப்பினர் பிரசாத் கொலம்பகே ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது, இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2020ஆம் ஆண்டில், 31,000 டெங்கு வழக்குகள் மட்டுமே பதிவாகியுள்ளதாகவும் ஆனால் கடந்த ஆறு மாதங்களில் மாத்திரம் 25,000 க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வழக்குகளில் பெரும்பாலானவை மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளன என்றும் குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் அதிக வழக்குகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பினால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த அபாயம் குறித்து மக்கள் மற்றும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் இல்லையெனில், எதிர்காலத்தில் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளில் டெங்கு பரவல் தொடர்பாக கவனம் செலுத்தத் தவறியுள்ளோம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள வெள்ளிக்கிழமை விடுமுறையை மக்கள் தங்கள் சொந்த தோட்டங்களையும் சுற்றியுள்ள சூழலையும் சுத்தம் செய்ய அன்றைய நாளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# அதிமுகவில் என்ன நடக்கின்றது? பன்னீர்செல்வம் மனம்திறக்கிறார்!

## பொதுச்செயலாளர் பதவி ஜெயலலிதாவுக்கு மட்டுமே உரியது என்பதால் அதனை மாற்ற முடியாது!

அதிமுகவில் ஒற்றைத்தலைமை என்பது தற்போதைய சூழ்நிலையில் தேவையில்லை. கட்சியின் பொதுச் செயலாளர் பதவி என்பது ஜெயலலிதாவுக்கு மட்டுமே உரியது என்று பொதுக்குழுவிலேயே தீர்மானம் போடப்பட்டு விட்டது. அதை மீறுவது ஜெயலலிதாவுக்கு செய்யும் துரோகம் என்று கூறியிருக்கிறார் அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம்.

அதிமுக பொதுக்குழு ஜூன் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது. அந்த கூட்டத்தை நடத்தக்கூடாது என்று சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதன் மீதான விசாரணை வரும் 22ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஜூன் 15ம் திகதி நடைபெற்ற அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுக்குழு கூட்டம் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், “ஒற்றைத் தலைமை குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதற்கு பெரும்பான்மையானவர்கள் ஆதரவளித்துள்ளனர். இன்றைய சூழலில் ஒற்றைத் தலைமை என்பது காலத்தின் தேவையாக இருக்கிறது. யார் அந்த ஒற்றைத் தலைமை என்பது குறித்து கட்சியின் மூத்த நிர்வாகிகள் முடிவு செய்வார்கள்“ என்றார்.

இந்த நிலையில், சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் வியாழக்கிழமை காலையில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் வைத்தியலிங்கம், பொன்னையன், நத்தம் விஸ்வநாதன், வைகைச் செல்வன், மனோஜ் பாண்டியன், ஜே.சி.டி. பிரபாகர், செம்மலை, ஆர்.பி. உதயகுமார், வளர்மதி, ஜெயக்குமார், சி.பி. சண்முகம் உள் ளிட்டோர் ஆலோசனை நடத்தினர்.



இதைத்தொடர்ந்து அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் அங்கு வந்து தமது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். சேலத்தில் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி இருந்த நேரத்தில் திடீ ரென்று சென்னையில் பன்னீர்செல்வம் நடத்திய ஆலோசனைக் கூட்டம், அக்கட்சி மட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள தமது அரசு குடியிருப்பில் செய்தியாளர்களிடம் ஓ.பன்னீர்செல்வம் பேசினார். அப்போது கட்சியில் கடந்த சில ஆண்டுகளாக நடந்த விஷயங்கள் இதுவரை வெளியே பேசாமல் தவிர்த்து வந்த தகவல்களை பன்னீர்செல்வம் பேசினார். அதன் விவரம்:

கழகத்தை வழிநடத்தும் பொறுப்பு, ஒவ்வோர் அதிமுக தொண்டர்களால் தேர்தல் முறையில் பொதுச்செயலாளர் என்ற பதவி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே விதிகளை எம்ஜிஆர் உருவாக்கினார்.

இந்த சட்ட விதி மற்றும் எந்த சூழ்நிலையிலும் எப்படியும் மாற்றப்படக் கூடாது. அப்படி உருவாக்கப்பட்ட பொதுச்செயலாளர் என்ற பதவி தான் எம்ஜிஆரால் உருவாக்கப்பட்டது. அவருக்குப் பிறகு 30 ஆண்டுகளாக அம்மா (ஜெயலலிதா) பொதுச்செயலாளராக இருந்தார். கழகத்தை அமைப்பு ரீதியாக வழிநடத்தி கட்சியின் சட்ட விதிப்படி கிளை, பேரூராட்சி, நகராட்சி, மாவட்ட கழகம், தலைமைக்கழக நிர்வாகிகள் தேர்வு நடத்தப்பட்டது.



ஆனால், ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு பொதுச் செயலாளர் பதவி என்பது அவருக்கு மட்டுமே உரித்தானது என்ற நோக்கத்தில் அவருக்குரிய அந்தஸ்தை வழங்கினோம். அதன் பிறகு இரட்டைத் தலைமை என்ற அடிப்படையில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவி உரு வாக்கப்பட்டது. அப்போதே இந்த பதவி களை ஏன் உருவாக்க வேண்டும் என நான் கேட்டேன். எனக்கு துணை முதல்வர் பதவியோ அமைச்சர் பதவியோ தேவையில்லை என்று கூறினேன்.

“எடப்பாடி பழனிசாமியுடன் சேர்ந்து செயல்படும் தேவை அவசியமானது. காரணம், எங்களுக்கு எதிராக டிடிவி தினகரன் 17 உறுப்பினர்களுடனும் திமுக உறுப்பினர்கள் ஆதரவுடனும் இருந்தனர். அப்போதிருந்த அதிமுக ஆட்சி பறிபோகக் கூடாது என்ற நல்லெண்ணத்தில், டிடிவி தினகரன் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்ததால் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அரசு காப்பாற்றப்பட்டது.” என்றார்.

“இரட்டைத் தலைமை” என்பது வெறும் பதவி மட்டுமே என்று கூறினார்கள். பிறகு, கழக நடவடிக்கையில் இருவரும் சேர்ந்து கையெழுத்து போட வேண்டும் என்றவாறு இருக்க வேண்டும் என்று கூறினார்கள். அப்போது கழகம் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற தொண்டர்களின் எண்ணத்தை பிரதிபலிக்கும் வகையில் செயல்பட நான் ஒப்புக் கொண்டேன்.

அப்போது, எடப்பாடி பழனிசாமி ஆட்சியில், துணை முதல்வர் என்ற பதவி வெறும் பெயரளவுக்கே இருந்தது. அதற்கு எந்த அதிகாரமும் இல்லை என்பது தெரிந்தும், அதற்கு முன் னதாக, டெல்லி சென்று பிரதமரை சந்தித்தபோது அவரும் துணை முதல்வர் பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நிர்பந்தித்தார். அதனால் ஏற்றுக் கொண்டேன்.

நல்லாதான் போய்க் கொண்டிருந்தது. இந்த இரட்டைத் தலைமை. ஒற்றைத் தலைமை என்பதே ஏன் வந்தது? எனத் தெரியவில்லை.

**சிறப்பு அழைப்பாளர்களுக்கு ஏன் அழைப்பில்லை?**

பொதுக்குழு தீர்மானம் தொடர்பாக முக்கியமான கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்பிதழ் போய்க் கொண்டிருந்தது. அம்மா காலத்தில் இருந்தே சிறப்பு அழைப்பாளர்களாக இருந்தவர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு ஏன் செய்யவில்லை என்று நான் எடப்பாடி பழனிசாமியிடம் கேட்டேன்.

பொதுக்குழுவிற்கான ஆலோசனைக் கூட்டத்தில், எடப்பாடி பழனிசாமிதான் மாதவரம் மூர்த்தி என்பவரை பேச அழைத்தார். அவர்தான் ஒற்றைத் தலைமை குறித்து முதலில் பேசினார். அப்படியொரு திட்டம் குறித்து கட்சியின் ஒருங்கிணைப்பாளரான என்னிடமோ பிறரிடமோ ஆலோசிக்கப்படவில்லை.

இத்தகைய சூழலில்தான் கட்சியில் ஒரு அறைக்குள் பேச வேண்டிய விஷயத்தை வெளியே பேசியிருக்கிறார் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார். அவர் பேட்டி கொடுத்ததால்தான் பிரச்னை பூதாகரமாகியிருக்கிறது. நான் இந்த கட்சியில் பல்வேறு பொறுப்புகளில் இருந்துள்ளேன். ஜெயலலிதா உயிருடன் இருந்தபோது எவ்வித சஞ்சலங்களுக்கும் இடம் கொடுக்காமல் மன நிறைவோடு பணியாற்றியிருக்கிறேன்.

ஜெயலலிதா உடல் நலமின்றி இருந்த காலகட்டத்தில் அவருக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் நீங்கள் தான் முதல்வராக இருக்க வேண்டும் என்று சொன்ன போது கூட நான் மூன்று மாதங்களுக்கு மட்டும் இருக்கிறேன் என்று சொன்னவன் நான். தற்போதைய சூழ்நிலையில் கட்சி ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். நாம் எதிர்கட்சியாக செயல்படுகிறோம். எனவே ஒற்றுமையாக இருக்க வேண்டும் என திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்துள்ளேன். என்றார் ஓபிஎஸ்.



**ஒற்றை தலைமை தேவையில்லை**

தொடர்ந்து அவர் கூறுகையில், “இன்றைய கால கட்டத்தில் இரட்டைத் தலைமை நன்றாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது. அம்மா (ஜெயலலிதா) பொதுச் செயலாளராக இருந்தபோது அவர் மட்டுமே வகித்த பதவியில் வேறு யாரும் வரக்கூடாது என்று பொதுக்குழு மூலம் முடிவு எடுக்கப்பட்டது. அதற்கு முரணாக செய்வதாக இருந்தால் அது அம்மாவுக்கு (ஜெயலலிதாவுக்கு) செய்யும் துரோகமாக கருதப்படும். எத்தனையோ பிரச் னையில் நான் எடப்பாடி பழனிசாமியுடன் பேசியிருக்கிறேன். எனக்கு எந்த ஈகோவும் இல்லை. அவருடன் பேச நான் தயாராகவே இருக்கிறேன்.

**என்னை யாரும் ஓரங்கட்ட முடியாது**

இதற்கு முன்னதாக, ஒற்றைத் தலைமை குறித்து, நானோ எடப்பாடி பழனிச்சாமியோ ஒன்றாகவோ, தனியாகவோ பேசியதில்லை. கட்சிக்காக, தொண்டர்களுக்காகவே நான் விட்டுக் கொடுத்தேன். நான் அதிகாரப் பதவிக்கு ஆசைப்பட்டதில்லை. தொண்டர்களுக்காகவே விட்டுக் கொடுத்துள்ளேன். என்னை யாரும் ஓரம் கட்ட முடியாது. தொண்டர்களிடமிருந்து என்னை யாரும் பிரிக்க முடியாது. அந்தளவுக்கு தொண்டர்களோடு தொடர்பில் இருப்பவன் நான். ஒருங்கிணைப்பாளர் பதவியில் இருந்து விலகுங்கள் என்று என்னை யாரும் கட்டாயப்படுத்த முடியாது என்றார் பன்னீர்செல்வம்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பன்னீர்செல்வம் அளித்த பதில்:

**தற்போதுள்ள பிரச்னைக்கு தீர்வு என்ன ?**

தீர்வு குறித்த திட்டத்தை கட்சி நிர்வாகிகளிடம் தெரிவித்துள்ளோம். குறிப்பாக, கட்சியின் மூத்த நிர்வாகிகள் 14 பேர் கொண்ட உயர்மட்டக் குழு அமைப்பது உள்ளிட்ட திட்டத்தை நிர்வாகிகளிடம் தெரிவித்துள்ளோம். பொதுச் செயலாளர் பதவியில் ஜெயலலிதா இடத்தில் வேறு யாரையும் வைத்து பார்க்க முடியாது என்று சொல்லும் நீங்கள் சசிகலாவை பொதுச் செயலளாராக்கியது ஏன் ?

“பொதுச் செயலாளர் (ஜெயலலிதா) மறைவையடுத்து, அப்போதிருந்த சூழலில் கட்சி அமைப்பு, செயல்பாட்டிற்காக தற்காலி பொதுச் செயலாளராக அவர் தேர்வு செய்யப்பட்டார். தொண்டர்களால் பொதுச் செயலாளர் தேர்வு செய்யப்படும் வரை, கட்சியின் அமைப்பு ரீதியிலான செயல்பாட்டிற்கான தற்காலிக ஏற்பாடுதான் அது.

**பொதுக்குழுவில் ஒற்றைத் தலைமை தீர்மானம் கொண்டு வந்தால்?**


“ஒருங்கிணைப்பாளர் ஒப்புதல் இல்லாமல் அப்படி ஒரு தீர்மானம் கொண்டு வர முடியாது. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் மற்றும் நிர்வாகிகள் பேசி ஒரு முடிவு எடுத்து விட்டால், இதற்கு தேவை இருக்காது.

**தற்போது ஒற்றைத் தலைமை குறித்து பேச்சுக்கு யார் காரணம்?**

இது குறித்து நேரடியாக குறிப்பிட்டு யார் மனதையும் நோகடிக்க விரும்பவில்லை.

**கட்சிக் கட்டுப்பாட்டை மீறி பேட்டியளித்த ஜெயக்குமார் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?**

பொறுத்திருந்து பாருங்கள். **(பிபிசி)**



# ராஜபக்ஷர்கள் இன்று அரசியலில் 'கிங் மேக்கர்'கள்

**வி.தேவராஜ்**

ராஜபக்ஷர்கள் கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குமாறு தென்னிலங்கையைக் கோரினர். 69 இலட்சம் வாக்குகளை அளித்து தென்னிலங்கை மக்கள் அவரை ஜனாதிபதியாக்கினர். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைத் தாருங்கள் என்று ராஜபக்ஷர்கள் தென்னிலங்கையிடம் கோரினர். அந்தக் கோரிக்கையையும் தென்னிலங்கை மக்கள் நிறைவேற்றி வைத்தனர்.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்துக்கான மக்கள் ஆணையை வைத்துக் கொண்டு 20ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதியை சர்வாதிகாரியாக மகுடம் சூட்டினர். தென்னிலங்கை மக்கள் வெறும் பார்வையாளராகப் பார்த்துக் கொண்டிருந்தனர். ராஜபக்ஷர்கள் தமது குடும்பத்துக்கு ஏற்றாற் போல் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தனர். அப்பொழுதும் தென்னிலங்கை பார்த்துக் கொண்டிருந்தது.

நாடு சூறையாடப்பட்டது. இலங்கையின் கஜானா காலியாகியது. எல்லாவற்றுக்கும் மக்கள் வரிசையில் நிற்க வேண்டியதாயிற்று. நாட்டை ராஜபக்ஷ குடும்பமும் அவர்களுடன் இணைந்த ஆளும் வர்க்கமும் மீள முடியாத கடன் பொறியில் தள்ளினர். இறுதியாக முழு நாட்டையும் மக்களையும் 'படடினிப் பொறிக்குள்' தள்ளினர். அப்பொழுது தான் தென்னிலங்கை விழித்தது. விழித்து என்ன பயன் எல்லாமே கட்டு மீறிப் போய்விட்டது.

'கோட்டா கோ' என தென்னிலங்கை இளைஞர்களும் யுவதிகளும் களத்தில் இறங்கினர். காலிமுகத் திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக 'கோட்டா கோ கம' என்ற கிராமத்தையே உருவாக் கினர். இந்த தென்னிலங்கை இளைஞர் யுவதிகளின் கருத்தியல் தென்னிலங்கை மக்களின் உணர்வுகளைக் கிளறியது. நாடு தழுவிய போராட்டம் மற்றும் தென்னிலங்கையில் பல இடங்களில் 'கோட்டா கோ கம' கிராமங்கள் உருவாகின. அலரி மாளி கைக்கு முன்பாக 'மைனா கோ கம' உருவாகியது. இவைகளுடன் 'கபுடா கா கா' வும் இணைந்து கொண்டது.

**பாசாங்கு அரசியல்**

இதன் எதிரொலியாக பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்தார். ராஜபக்ஷ குடும்பத்தினர் அமைச்சுப் பதவிகளைத் துறந்தனர். 21ஆவது திருத்தம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் பற்றிப் பேசப்படும் நிலையில் மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தனக்கு தேசியப் பட்டியல் மூலம் கிடைத்த நாடாளுடமன்றப் பதவியை இராஜினாமா செய்துள்ளார். இது 21ஆவது திருத்தத்துடன் தொடர்புபட்ட வெளிநாட்டுப் பிரஜை குறித்த விடயத்தைப் பேசாமல் இருப்பதற்கான காய் நகர்த்தலாகவே உள்ளது. இவ்வாறு தோல்வியை ஒப்புக் கொள்வது போன்று ராஜபக்ஷர்கள் பாசாங்கு காட்டிய அதேவேளை மறுபுறம்

- மக்கள் வழங்கிய ஆணையைக் கேடயமாக்கி அரசியலமைப்பு ரீதியில் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டனர்.
- தமக்கென ஒரு விசுவாசியை பிரதமராக்கி 'மொட்டுக் கட்சியின்' அமைச்சரவையையும் அமைத்து 'ஒரு சமாளிப்பு' ஆட்சியை நடத்தத் தொடங்கிவிட்டனர்.
- பதவி விலகப்போவதில்லையென ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். நாட்டையும் மக்களையும் படு குழிக்குள் வீழ்த்தியதை ஒப்புக் கொள்ளும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தான் தோல்வியுற்ற ஜனாதிபதியாக வெளியேறப் போவதில்லை. மக்கள் வழங்கிய ஆணைக்கேற்ப தொடர்ந்தும் பதவியில் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார்.
- பஷில் ராஜபக்ஷ நாடாளுமன்றப் பதவியைத் துறந்து சாதாரண பிரஜையாகியுள்ளதாக அறிவித்துள்ளார். அதே வேளையில் தான் தொடர்ந்தும் பொது ஜன பெரமுன கட்சியின் நலன்களுக்காக அரசியலில் இருக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

மொத்தத்தில் ராஜபக்ஷர்கள் ஜனாதிபதி பதவி மற்றும் பொது ஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற பலத்தைக் கைகளில் வைத்துள்ள பஷில் ராஜபக்ஷ மூலம் தொடர்ந் தும் இலங்கை அரசியலில் 'கிங் மேக்கராக' கோலோச்ச காய்களை நகர்த்தியுள்ளனர்.

இலங்கை அரசியலில் இதுவரை முடிசூடா மன்னர்களாக இருந்த ராஜபக்ஷர்கள் இன்று 'கிங் மேக்கர்' அரசியலை நடத்தத் தொடங்கி விட்டனர்.

மக்களுக்கு ஆணை வழங்க அனுமதித்துள்ள அரசியலமைப்பு அந்த ஆணை மீறப்படும் போது அல்லது துஷ்பிரயோகம் செய்யப்படும் போது அந்த ஆணையை மக்களால் மீளப் பெறுவதற்கான அனுமதியை அரசியலமைப்பு வழங்கவில்லை. மக்களின் ஆணை பெற்று ஆட்சியில் அமர்ந்துள்ள ஆளும் எதிர்க் கட்சிகளுக் கிடையிலான பலப் பரீட்சையிலேயே மக்கள் ஆணை தீர்மானிக்கப்படுகின்றது.

அடுத்த தேர்தல் நடைபெறும்வரை 'ஆணை வழங்கிய மக்கள்' வெறும் பார்வையாளர்களாக இருந்துவிட்டுப் போக வேண்டியது தான் அரசியல்வாதிகளின் நிலைப்பாடாக உள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாடாகவும் உள்ளது. இலங்கை அரசியலில் இதுதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

'கோட்டா கோ கம' இளைஞர் யுவதிகளினதும் தென்னிலங்கை மக்களினதும் அரசியல் அபிலாசைகளுக்கு தீனி போடுவதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்கவை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள 'அரசியல் நாடகம்' மற்றும் 'கிங் மேக்கர்' அரசியல் அமையப்போவதில்லை என தென்னிலங்கை உரத்துக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த நல்லாட்சி காலத்தில் அன்றைய பிரதமரும் இன்றைய பிரதமருமான ரணில் விக்ரமசிங்க மற்றும் அவருடன் அமைச்சரவையில் அமர்ந்துள்ள அமைச்சர்களும் ராஜபக்ஷர்களை காப்பாற்றிய நகர்வுகளை நாடே அறியும்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அரசியலில் 'ஒட்சிசன்' தேவைப்படுகின்றது. ராஜபக்ஷ குடும்பங்கள் போட்ட 'பிரதமர் பதவி பிச்சை' மாத்திரம் இலங்கை அரசியலில் தனக்கும் தான் தலைமையேற்றிருக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்குமான அரசியல் பாதையை அமைத்துக் கொள்ள போதுமானதல்ல என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். எனவே, அவசரப்பட்டு விரைவில் ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்க அவர் முன்வரமாட்டார்.

ராஜபக்ஷர்களும் நாட்டில் ஒரு தேர்தல் வருவதை விரும்பும் நிலையில் இல்லை. ராஜபக்ஷர்களைப் போன்றே அவர்கள் சார்ந்த பொது ஜன பெரமுன கட்சியும் ஆளும் வர்க்கமும் தேர்தலை எதிர் கொள்ளும் மன நிலையில் இல்லை.

மொத்தத்தில் ரணில் இலங்கை அரசியலில் மீண்டெழ துடிக்கின்றார். ராஜபக்ஷர்கள் தமக்கெதிராக தென்னிலங்கையில் திரண்டெழுந்து வருகின்ற எதிர்ப்பலைகளைக் கடந்து போய்விடத் துடிக்கின்றனர்.

அந்த வகையில் தென்னிலங்கை கோருவது போன்று ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேறும் நிலையில் இல்லை. அவரை வெளியேற்றும் வல்லமை கொண்டதாக எதிர்க் கட்சிகள் இல்லை. அரசியலமைப்பு ரீதியிலும் ஜனாதிபதியை அகற்றுவதற்கான எந்த மார்க்கமும் இல்லை. நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிரான எந்த நகர்வுகளையும் தகர்த்தெறியும் சக்தி படைத்தவர்களாக ராஜபக்ஷகள் உள்ளனர்.

மொத்தத்தில் ராஜபக்ஷர்கள் மக்கள் தமக்கு வழங்கிய ஆணையைப் பொறியாக்கி அந்த பொறிக்குள் மக்களையே சிக்க வைத்துள்ள னர்.




இன்றைய நிலையில் நாடு நாடாளுமன்றத் தேர்தலுக்குப் போவதே ஒரே வழி. பொதுத் தேர்தலுடன் ஜனாதிபதி முறை குறித்து தீர்மானம் எடுக்கும் வழிவகைகள் குறித்து சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால், இப்போதைக்கு இது சாத்தியமாவதாகத் தெரியவில்லை. இந்த நிலைமை தொடர்வதும் மாற்றமடைவதும் தென்னிலங்கை இளைஞர் யுவதிகளினதும் மக்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**


- **1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.**

**01.** வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.




(1) (2) (3)

**02.**



(1) (2) (3)

**03.** இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

**04.** **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


**05.** சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

**06.** உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

**07.** உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், ............................... போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

**01.** (3)



**02.** (1)



**03.** (3) C, F / B, D / A, E

**18.05.2022**
**சனிக்கிழமை**

CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

CHANNEL - 2

**18.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ‘13’ ஐ முழுமையாக உள்வாங்கினால் ‘21’ இற்கு கூட்டமைப்பு முழு ஆதரவு!

## கோவிந்தன் கருணாகரம் கூறுகிறார்



மட்டக்களப்பு, ஜூன். 18

**21ஆவது திருத்த சட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கவேண்டுமானால் 13ஆவது திருத்த சட்டத்துக்குள் இருக்கும் அதிகாரங்களை முழுமையாக பரவலாக்கவேண்டும் என்ற திருத்தம் 21ஆவது திருத்த சட்டத்துக்குள் உள்வாங்கப்படவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சிலரும் 21ஆவது திருத்த சட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் செயற்படுவதுடன் அந்த சட்டத் திருத்தின் குழுவில் தாங்களும் உள்ளதாகப் பெருமையாக சொல்லி வருவருகின்றனர்.

மாகாணத்துக்கு காணி,நிதி அதிகாரங்கள் வழங்காமல் எந்த திருத்த சட்டமூலத்தையும் கொண்டுவருவதனால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

என்னைப்பொறுத்த வரையில் 21ஆவது திருத்தச் சட்டம் வரும் என்பதில் எந்த நம்பிக்கையும் இல்லை.இந்த திருத்தச் சட்டங்கள் மூலம் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு என்ன இலாபம் இருக்கின்றது என்பதை நாங்கள் முதலில் சிந்திக்கவேண்டும்.

இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட எட்டு திருத்தச் சட்டங்களுக்கு முன்னர் வந்த 13ஆவது திருத்தச் சட்டம் கூட இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. 13 ஆவது திருத்ததிற்குள் இருக்கின்ற காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் நிறைவேற்றப்படாத நிலையில் உள்ளது.இந்த அரசாங்கம் அரசியலமைப்பினை மீறுகின்றது.

21ஆவது திருத்த சட்டத்தினை நாங்கள் ஆதரிக்கவேண்டும் என்கின்ற நிலைப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சாரா ருக்குள்ளும் இருக்கின்றது .இந்த 21ஆவது திருத்த சட்டத்தினை வரையும்போது தாங்களும் அதில் முக்கிய பங்காற்றியதாகக்கூட கூறியிருக்கின்றார்கள்.

இந்த 21ஆவது திருத்த சட்டத்தின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தை ஒழித்து அந்த அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்கி அதன்மூலம் பாராளுமன்ற ஜனநாயக முறையினை கொண்டுவர வேண்டும்-என்றார். (அ)

# பெருமளவு எரிபொருள் கடத்திய மூவர் கைது!

திருமலை, ஜூன். 18

திருகோணமலை- மொரவெவ பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிலையத்தில் இருந்து கொழும்புக்கு லொறியொன்றில் டீசல் மற்றும் பெற்றோலைக் கொண்டு செல்லும்போது ரொட்டவெவ பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து லொறியுடன் மூன்று சந்தேக நபர்களை நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் காலி- இரத்தினபுரி- கொழும்பு பகுதியைச் சேர்ந்த நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சவூதியில் மரணித்தவரின் சடலம் 3 மாதங்களின் பின் வாகரைக்கு!

மட்டக்களப்பு, ஜூன். 18

சவூதி அரேபியாவில் பணிபுரிந்த நிலையில் மரணித்தவரின் சடலம் மூன்று மாதங்களின் பின்னர் இலங்கை வாகரைக்கு அனுப்பப்பட்டு உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டது.

வாகரை பாடசாலை வீதியை அண்டி வசிக்கும் வேதாரணியம் சுதாகாரன் (வயது 38) என்பவரின் சடலமே வாகரை மயானத்தில் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டது.

இவர் சவூதி அரோபியாவில் பணிபுரிந்து வந்த சமயம் உடல் உபாதைக்குள்ளான நிலையில் இவ்வருடம் மார்ச் மாதம் 26ஆம் திகதி மரணமடைந்திருந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

திருமணமாகாத இவர் கடந்த பல ஆண்டுகளாக சவூதி அரேபியாவிலேயே தொழில் வாய்ப்பைப் பெற்று பணியாற்றி வந்தவர் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர். (அ)

# மட்டக்களப்பில் நாளாந்தம் நீளும் எரிபொருள் வரிசை!



மட்டக்களப்பு, ஜூன். 18

எரிபொருள் தட்டுப்பாடு நாளாந்தம் இடம்பெற்று வரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றைப் பெறுவதற்கு பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று சிரமப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேசத்தில் விவசாயச் செய்கையில் ஈடுபடும் விசாயிகள், வாகனங்களைக் கொண்டு அன்றாட தொழில் ஈடுபடும் சாரதிகள் தங்களது வாகனத்துக்கான எரிபொருளை பெற்றுக் கொள்வதில் நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஓட்டமாவடியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தற்கு எரிபொருள் வருகின்றது என அறிந்துகொண்ட மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களுக்கு தேவையான பெற்றோல், டீசலை பெற்றுக் கொள்கின்றனர்.

தற்போது விவசாயச் செய்கை இடம்பெற்று வரும் நிலையில் விவசாயச் செய்கை, தோட்டச் செய்கை மேற்கொள்ள டீசல் தேவைப்படுவதுடன், கடற்றொழில் செல்லும் மீனவர்களுக்கும் டீசல், மண்ணெண்ணெய் தேவைப்பாடு அதிகமான காணப்படுகின்றது. இதனால் எரிபொருளை நம்பி தொழில் செய்பவர்கள் டீசல், மண்ணெண்ணெய், பெற்றோல் என்பவற்றுக்கு பல மணி நேரம் வெயிலில் இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (அ)

# உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் ஆரம்பம்




மட்டக்களப்பு, ஜூன் . 18

வாழைச்சேனை பிரதேச சபைக்கான கனேடிய உதவியின் கீழ் அமுல்படுத்தப் படுகின்ற உள்ளூர் பெண் தலைமைத்து வத்தை வலுப்படுத்துவதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் ஆரம்ப வைபவம் பேத்தாழை குகநேசன் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் பணிப்பாளர் சபையின் உப தலைவரும், சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாள ருமான ஏ.எம்.எம்.நௌஸாத், உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் பிரதான நிறை வேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகர, உள்ளூ ராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் பெருமாள் பிரதீப், சபையின் பிரதி தவிசாளர் எஸ்.யசோ தரன், சபை உறுப்பி னர்கள், சபையின் செயலாளர் எஸ்.நவநீதன், சபையின் சனசமூக உத்தியோகத்தர் எம்.ஹாரூன், சபையின் உத்தியோகத்தர்கள், சனசமூக அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் மற்றும் கனேடிய மாநகராட்சி சம்மேளனம் ஆகியன இணைந்து நடாத்தும் கனேடிய நிதி உதவியின் கீழ் இலங்கை உள்ளூராட்சி மன்றங் களின் பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் உள்ளூர் ஆளுகைக்கு தலைமை ஏற்கக் கூடிய வகையில் பெண்களை வலுவூட்டுவதற்காக அமுல்படுத்தவென திட்டமிடப்பட்டுள்ள ஆறு வருட செயற்றிட்டம் இடம்பெறவுள்ளது.

குறித்த திட்டங்களை செயற்படுத்தும் வகை யில் பிரதேச சபையின் தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் தலைமையில் செயற்குழு உருவாக் கம் செய்யப்பட்டதுடன், வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகர ஆகியோரால் திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆறு வருட செயற்றிட்டத்தின் கீழ் அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட வாழைச்சேனை பிரதேச சபைக்கு பகுதி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள கனேடிய நிதியான முப்பதாயிரம் டொலரான இலங்கை ரூபாவாக எண்பத்தையாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் பெருமாள் பிரதீப் தெரிவித்தார். (அ)

# போலந்திலிருந்து உக்ரைனுக்கு இரவு ரயிலில் ரகசியப் பயணம்!

## ஐரோப்பிய தலைவர்கள் மூவரது கீவ் விஜயத்தின் உள் தகவல்கள்





கீவ், ஜூன். 18

பிரான்ஸின் அதிபர் மக்ரோன் ஜேர்மனிய சான்சிலர் ஓலாப் சோல்ஸ், இத்தாலியப் பிரதமர் மரியோ ட்ராகி மூவரும் உக்ரைன் தலைநகர் கீவுக்குச் சென்றிருக்கின்றனர். அவர்களுடன் ருமேனியாவின் தலைவர் கிளாஸ் அயோஹானிஸும் உடன் சென்றுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய மூன்று நாடுகளது தலைவர்களின் இந்த ஒருமித்த விஜயம் குறித்த செய்திகள் ஏற்கனவே கசிந்திருந்தபோதிலும் மூவரும் எங்கிருந்து எந்த வழியாகப் போர்ப் பூமிக்குள் செல்லப்போகின்றனர் என்ற விவரங்கள் ரகசியமாகவே வைக்கப் பட்டிருந்தன.

போலந்தில் உக்ரைன் எல்லையோரம் உள்ள பழைய ரயில் நிலையம் ஒன்று மூன்று தலைவர்களதும் வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தினால் தற்போது கவனத்தை ஈர்த்துள்ளது.

முதலில் விமானம் மூலம் போலந்துக்கு வருகைதந்த சோல்ஸ், மக்ரோன், ட்ராகி மூவரும் பின்னர் தனித் தனியே அந்த ரயில் நிலையத்துக்குச் சாதாரண பயணிகள் போன்று கார்களில் வந்து இறங்கினர். இரவு ரயி லின் மூன்று வெவ்வேறு பகுதிகளில் தலைவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டி ருந்தது. உணவு, குடிபானங்கள் அடங்கிய பெட்டிகள் சிலவற்றுடன் மக்ரோன் ரயி லில் ஏறினார் என்று செய்தி வெளியாகியுள் ளது.

மூன்று தலைவர்களும் சுமார் பதினொரு மணி நேரம் இரவுப் பயணம் செய்தே கீவ் நகரைச் சென்றடைந்தனர்.

வழியில் ரயில் உக்ரைன் எல்லைக்குள் நுழைந்த சமயம் அந்நாட்டின் எல்லைக் காவல் படையினர் அந்த மூன்று சிறப்புப் பயணிகளது கடவுச் சீட்டுக்களையும் பரிசோதித்தனர் என்ற தகவலை ஏ.எப்.பி மற்றும் செய்தி நிறுவனங்கள் வெளியிட் டுள்ளன.

போராயுதங்களும் படை வாகனங்களும் பயணிக் கின்ற எல்லைப் புற வழிகளைக் கடந்து சென்ற ரயிலில் மூன்று முக்கிய ஐரோப்பியத் தலைவர்கள் பயணிக்கின்ற னர் என்ற தகவல் மிக ரகசியமாகப் பேணப் பட்டது. ஆயினும் மூவரினதும் மெய்க்காவ லர்கள் மற்றும் மூன்று நாடுகளினதும் புலனாய்வு அதிகாரிகள் சில செய்தியாளர் கள் உட்பட வேறு பலரும் அதே ரயிலில் சாதாரண பயணிகள் போன்று ஏறியிருந்த னர். பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி நாடுகளது வெளிநாட்டுப் பாதுகாப்புடன் தொடர்புடைய உளவுப்பிரிவினர் ரயில் பயண வழி முழுவதும் மிகத் தீவிரமான கண்காணிப்பு வலயங்களை உருவாக்கி இருந்தனர் என்று கூறப்படுகிறது.

தலைவர்கள் கீவ் நகரத்தின் ரயில் நிலையத்தில் இறங்குவதற்கு முன்பாக வான் தாக்குதல் எச்சரிக்கை செய்யும் சைரன்கள் ஆறு தடவைகள் ஒலித்தன என்று செய்தி வெளியாகியுள்ளது.

நாட்டின் கிழக்கே ரஷ்யப்படைகளது தாக்குதல்கள் தீவிரமாக இடம்பெற்றுவரு கின்றன. ரஷ்ய ஏவுகணைகள் ரயில் நிலையங்களையும் ரயில் மார்க்கங்களையும் தாக்கி வருகின்ற போதிலும் தலைநகர் கீவுக்குச் செல்வதற்கு அதைவிடப் பாது காப்பான வேறு வழிகள் கிடையாது. பெப்ரவரி 24 இல் போர் தொடங்கியதில் இருந்து உக்ரைன் வான் பரப்பு மூடப்பட் டுள்ளது. தலைநகருக்குச் செல்லும் பிரதான பெரும் தெருக்களும் பாலங்களும் தாக்குதல்களால் அழிந்துள்ளன.

இந்த நிலையில்தான் வெளிநாடுகளின் தலைவர்கள் ரயில் மார்க்கமாகக் கீவ் செல்வதைப் பாதுகாப்பு எனக் கருது கின்றனர்.

(அ)



## போதைப் பொருள் கடத்திய மொடல் அழகி ரஷ்யாவில் கைது!

மொஸ்கோ,ஜூன்.18

ரஷ்யாவில், போதைப் பொருள் கடத்தினார் எனற குற் றச்சாட்டில் அழகி போட்டியில் பரிசு வென்றவரும், பிரபல மொடல் அழகியான கிறிஸ்டி யானா துகினா கைது செய்யப் பட்டுள்ளார். குற்றம் நிரூபிக்கப் பட்டால், அவருக்கு, 20 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவில், 2.5 கிராமுக்கு மேல் போதைப் பொருள் வைத்திருந்தால், 10 ஆண்டு வரை சிறை தண்டனை விதிக் கப்படும். இந்நிலையில், அழகி போட்டியில் வென்றவரும், பிரபல மொடல் அழகியுமான கிறிஸ்டியானா துகினா, 500 கிராம் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சமீபத்தில் கைது செய்யப்பட் டார்.

இவர், 2019இல் நடந்த மிஸ் துபாய் அழகிப்போட்டியில் இரண்டாம் இடம் பிடித்தார். இதைத் தொடர்ந்து, பல்வேறு அழகி போட்டிகளில் அவர் பரிசுகள் வென்றுள்ளார். நீதிமன்றத்தில் இவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட் டால், 20 ஆண்டு வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என தெரிகிறது.



## வடகொரியாவில் புதிதாக பரவும் குடல் தொற்றுநோய்!

பியொங்யாங், ஜூன். 18

வடகொரியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்து வரும் நிலை யில், தற்போது புதிதாக குடல் தொற்று நோயும் பரவத் தொடங்கி யுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித் துள்ளது.

ஹெஜூநகரில் உள்ள மக்கள் கடுமையான குடல் தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக வடகொரிய அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், குடல்தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக ஹேஜூவுக்கு மருந்துக ளை அனுப்ப அந்நாட்டு தலைவர் கிம் ஜோ உன் உத்தரவிட்டுள்ளார்.

அத்தோடு, பாதிக்கப்பட்ட நபர் களை தனிமைப்படுத்தி தொற்று நோய் தொடர்பான பரிசோதனைகளை தீவிரப்படுத்துமாறும் அவர் வலியு றுத்தியுள்ளார். (அ)

# பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட 4 பேர் மெக்ஸிக்கோ உணவகத்தினுள் சுட்டுக்கொலை!

மெக்ஸிக்கோ சிற்றி, ஜூன். 18

மெக்ஸிக்கோவில் உள்ள உணவகம் ஒன்றில் திடீரென உள்ளே புகுந்த மர்ம நபர்கள் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியதில், பிறந்தநாள் கொண்டாட் டத்தில் ஈடுபட்டிருந்த 4 பேர் உயிரிழந் தனர். மற்றொருவர் காயமடைந்தார்.

மெக்ஸிக்கோ-டெனிஸ் பகுதியில் உள்ளூர் நேரப்படி நேற்று முன் தினம் வியாழக்கிழமை முற்பகல் 11:10 மணியளவில் உணவகத்துக்குள் நுழைந்த ஆயுதம் ஏந்திய இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், இதில் பிறந்தநாளை கொண்டாடிக் கொண்டிருந்த இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும்




கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மற்றொருவர் காயம டைந்து அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரின் தற்போதைய நிலை தெரியவில்லை.

வாகனத்தில் வந்திறங்கிய இரண்டு துப்பாக்கிதாரிகள் உணவகத்துக்குள் சென்று அங்கிருந்தவர்களைச் சுட்டுக் கொன்றனர். அவர்கள் வந்த வாகனம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், வாகனத் தின் உரிமையாளரைத் தேடி வருவதாக வும் கூறியுள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற படு கொலைகளுடன் இந்த ஆண்டு இது வரை மெக்ஸிக்கோவில் துப்பாக்கி வன் முறைகளில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை 50 ஆக அதிகரித்துள் ளது. (அ)

# பழங்குடி மக்கள் நல ஆர்வலர் இருவர் பிரேஸிலில் கொலை!

பிரேஸிலியா,ஜூன் 18

பிரிட்டன் பத்திரிகையாளர் டான் பிலிப், பழங்குடியின நிபுணர் ப்ருனோ ஃ பிரிரா ஆகிய இருவரும் அமேசன் காட் டில் கொல்லப்பட்ட சம்பவம் உலகள வில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டான் பிலிப்பும், பிரேசிலை சேர்ந்த பழங்குடியின நிபுணரான ப்ருனோ ஃ பிரிராவும் கடந்த ஜூன் 5ஆம் தேதி சுலோ மாகாணத்தில் உள்ள சா கேப்ரி யல் கிராமத்தில் இருந்து படகு மூலம் மற்றொரு பழங்குடியின கிராமத்திற்கு புறப்பட்டுசென்றுள்ளனர். ஆனால், பல மணி நேரம் கடந்தும் டான் பிலிப்பும், ப்ருனோவும் தங்களது இலக்கான பழங் குடி கிராமத்திற்குச் செல்லவில்லை. இத னைத் தொடர்ந்து அவர்கள் இருவரை யும் காணவில்லை என்று பழங்குடி மக்கள், பொலீஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து, அமேசன் அடர் காட்டில் இருவரை தேடும் பணி முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலை யில், டான் பிலிப், ப்ருனோவும் கொல லப் பட்டு, அவர்களது உடல்கள் எரிந்த நிலையில் இராணுவத்தினர் கண்டெ டுத்ததாகவும் நேற்றுமுன்தினம் அறிவித் தனர். இந்தக் கொலை தொடர்பாக ஒருவரை பொலிஸார் கைதுசெய்தனர் அவரும் அவரது சகோதரரும் அமேசான் காட்டில் உள்ள ஆற்றில் சட்ட விரோத மாக மீன் பிடித்து வந்துள்ளனர். இதனை டான் பிலிப்பும், ப்ருனோவும் எதிர்த்துள் ளனர். இந்த நிலையில்தான் இருவரை யும் தாம் கொன்றனர் என பொலிஸாரி டம் அமர்லியோ வாக்குமூலம் அளித் துள்ளார்.

# அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது இலங்கை அணி!

கண்டி, ஜூன் 18

இரண்டாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை 26 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இலங்கை அணி. இதனால், 5 போட்டிகள் கொண்ட தொடரை 1 - 1 என்ற நிலையில் சமநிலையை அடைந்துள்ளது.

கண்டி பல்லேகலையில் பகல் இரவு போட்டியாக நேற்றுமுன்தினம் நடந்த இந்தப் போட்டியில் ஈட்டிய வெற்றியுடன் 5 போட்டிகள் கொண்ட தொடரை 1 - 1 என இலங்கை சமப்படுத்தியது.

இலங்கையின் பந்துவீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சால் இந்த வெற்றி சாத்தியமாகியிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47.4 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழையால் ஆட்டம் தடைப்பட்டது.

இதனால், முன்னதாகவே இடைவேளை வழங்கப்பட்டது. பிற்பகல் 5 மணிக்கு இடைநிறுத்தப்பட்ட ஆட்டம் மீண்டும் 8 மணிக்கு ஆரம்பமானபோது டக்வேர்த் லூயிஸ் முறைமை பிரகாரம் அவுஸ்திரேலியாவின் வெற்றி இலக்கு 43 ஓவர்களில் 216 ஓட்டங்கள் என மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 37.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்று



தோல்வி அடைந்தது.

அவுஸ்திரேலியா சார்பாக முதல் 8 வீரர்கள் துடுப்பாட்டத்தை சிறப்பாக ஆரம்பித்தபோதிலும் இருவர் மாத்திமே 30 ஓட்டங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றனர்.

டேவிட் வோர்ணர் (37), க்ளென் மக்ஸ்வெல் (30) ஆகிய இருவரே ஓரளவு துடுப்பாட்டத்தில் பிரகாசித்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் சாமிக கருணாரட்ன 47 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் துஷ்மந்த சாமீர 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் துனித் வெல்லாலகே 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் தனஞ்சய டி சில்வா 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 47.4 ஓவர்களில் 220 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறத்தப்பட்டு இலங்கையின் துடுப்பாட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

துடுப்பாட்டத்தில் குசல் மெண்டிஸ் 36 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா, தசுன் சானக ஆகிய இருவரும் தலா 34 ஓட்டங்களையும் துனித் வெல்லாலகே 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

அவர்களைவிட வேறு எவரும் 20 ஓட்டங்களை எட்டவில்லை.

அவுஸ்திரேலிய பந்துவீச்சில் பட் கமின்ஸ் 35 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் க்ளென் மக்ஸ்வெல் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் மத்தியூ கனேமன் 48 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)



## 103 ஓட்டங்களுக்கு சுருண்டது வங்கம்!

நோர்த் சவுண்ட், ஜூன் 18

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸில் 103 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

பங்களாதேஷ் அணி, மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து இரு டெஸ்ட்கள், 3 இருபது - 20, 3 ஒருநாள் தொடர்களில் விளையாடுகிறது.

நோர்த் சவுண்டில் தொடங்கிய முதல் டெஸ்டில் முதல் இனிங்ஸில் 32.5 ஓவர்களில் 103 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது பங்களாதேஷ் அணி.

அணித் தலைவர் சகீப் அல் ஹசன் மட்டும் நன்கு விளையாடி 51 ஓட்டங்கள் எடுத்தார்.

ஜேடன் சீல்ஸ், அல்ஸாரி ஜோசப் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினார்கள்.

முதல் நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி, 48 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 95 ஓட்டங்களை எடுத்தது.

அணித் தலைவர் பிராத்வெயிட் 42, போனர் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)

## பெர்லின் ஓப்பன் ரென்னிஸ் காலிறுதியில் பென்சிச்!



பெர்லின், ஜூன் 18

சுவிற்சர்லாந்தின் பென்சிச் பெர்லின் ஓப்பன் தொடரின் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜேர்மனியில் நடைபெறும் பெர்லின் ஓப்பன் பெண்கள் ரென்னிஸ் தொடரில் சுவிற்சலாந்தின் பெலிண்டா பென்சிச் காலிறுதிக்கு முன்னேறினார்.

தரவரிசையில் 8ஆம் இடத்திலிருக்கும் பென்சிச் முந்தைய சுற்றில் 6-4, 1-6, 6-1 என்ற செற்களில் ரஷ்யாவின் அனா கலின்ஸ்கயாவை தோற்கடித்தார்.

காலிறுதியிலும் ரஷ்யாவின் லுட்மிளா சாம்சனோவா அல்லது வெரோனிகா குதர்மெடோவா ஆகியோரில் ஒருவரை எதிர்கொள்ள இருக்கிறார் பென்சிச். (ஐ)

## டெவன் கொன்வேக்கு கொரோனா தொற்று!

லண்டன், ஜூன் 18

நியூசிலாந்து அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையேயான கடைசி டெஸ்ட் போட்டி லீட்ஸில் 23ஆம் திகதி தொடங்குகிறது. இந்த நிலையில் நியூசிலாந்து அணியின் டேவன் கொன்வேக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் கொன்வே விளையாடி இருந்தார். அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்.

சகலதுறை வீரர் மைக்கேல் பிரேஸ்வெல், பிசியோ விஜய் வல்லபட் மற்றும் பயிற்சியாளர் கிறிஸ் டொனால்ட்சன் ஆகியோருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அணியின் மற்ற வீரர்களுக்கு எடுக்கப்பட்ட பரிசோதனை முடிவில் தொற்று இல்லாததால் திட்டமிட்டபடி போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





## ஒருநாள் உலகக் கிண்ணத்தில் விளையாடுவாரா மோர்கன்?

லண்டன், ஜூன் 18

இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் விளையாடுவது பற்றி இங்கிலாந்து ஒருநாள் அணியின் தலைவர் இயன் மோர்கன் பதில் அளித்துள்ளார்.

இங்கிலாந்து அணி மோர்கன் தலைமையில் 2019 உலகக் கிண்ணத்தை வென்றது. இந்நிலையில் தன்னுடைய அடுத்தக்கட்ட கிரிக்கெட் வாழ்க்கை குறித்து மோர்கன் கூறியவை வருமாறு,

ஒருநாள் உலகக் கிண்ணம் நடைபெறுவதற்கு இன்னும் நீண்ட நாள் இருக்கிறது. அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கு நான் தயாராக வேண்டும். என்னுடைய பங்களிப்பு, உடல் தகுதி ஆகியவற்றைக் கொண்டு முடிவெடுப்பேன்.

நான் தலைவரான பிறகு மற்ற எல்லோரையும் எப்படி மதிப்பிடுகிறேனோ அப்படித்தான் என்னுடைய பங்களிப்பையும் மதிப்பிடுவேன். என்னால் உலகக் கிண்ண வெற்றிக்குப் பங்களிக்க முடியும் எனத் தோன்றுகிறது. அதுதான் என்னை இயக்குகிறது. அணியின் நலன்தான் எனக்கு முக்கியம் - என்றார். (ஐ)

# நாடு மூடப்படும் அபாயம்!

*கல்விசாரா ஊழியர் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூன் 18

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், முழு நாடும் பூட்டப்படும் அபாயத்தில் இருப்பதாக கல்விசாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் அஜித் திலகரத்ன, நிலவும் பிரச்னைகளுக்கு மத்தியில் கடமைக்கு சமூகமளிப்பதில் அரச ஊழியர்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்தார்.

இலங்கையிடம் 6,000 மெற்றிக் தொன் பெற்றோல் மட்டுமே உள்ளது என்றும், எரிபொருள் இறக்குமதிக்கு எதிர்பார்க்கப்படும் திகதி எதுவும் இல்லை என்றும் திலகரத்ன குறிப்பிட்டார்.

இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், எதிர்காலத்தில் நாடு ஸ்தம்பிதமடைந்து மூடப்படும் என திலகரத்ன கூறினார். (அ)

# இரும்பு மனம் கொண்ட ரணில்!

*பாராட்டுகிறார் பாலித ரங்கே பண்டார*

கொழும்பு, ஜூன் 18

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை பெற்றுக்கொண்டமை இலகுவான விடயம் அல்ல என்பதை அனைவரும் நன்கு உணர்ந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இக்கட்டான நேரத்தில் இவ்வாறான கடினமான பணியை இரும்பு மனம் கொண்ட ஒரு மனிதனால் மட்டுமே செய்ய முடியும் எனவும் அவர் கூறினார்.

ராஜபக்ஷ ஆட்சியின் மீதான சர்வதேச நம்பிக்கை முற்றாக சிதைந்து, உதவிய நாடுகள் முற்றாக விலகியிருந்ததாகவும், இன்று ரணில் விக்கிரமசிங்கவினால் அந்நாடுகளின் உதவிகள் அனைத்தையும் மீளப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

ஆனாலும், ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி என்பன "ரணிலுக்கு சர்வதேச சமூகத்திடம் இருந்து வந்த உதவிகள் எங்கே?" என்று கேட்கின்றனர். இந்த தருணத்தில் ரணில் விக்ரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்டிருக்காவிட்டால் நாடு பாரிய அழிவை சந்தித்திருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)



# நீண்டு செல்கிறது எரிபொருள் வரிசை

*இரவு பகலாக காத்திருக்கும் மக்கள்*

கொழும்பு, ஜூன் 18

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அருகில் கிலோமீற்றருக்கும் கூடுதலான தூரம் நீண்ட வரிசைகள் காணப்படுகிறது. எரிபொருள் இல்லாவிட்டாலும், எரிபொருளை பெறுவதற்காக, இரவு, பகலாக ஏராளமானோர் வரிசையில் காத்திருக்கின்றனர்.

கம்பஹா, கொழும்பு, களுத்துறை, மாத்தறை, காலி ஆகிய இடங்களில் மாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பல நாட்களாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் காணப்படுகின்றன.

முச்சக்கர வண்டிச் சாரதிகள், மோட்டார் சைக்கிள்கள், தனியார் பஸ்கள் உட்பட பல்வேறு வாகனங்கள் இவ்வாறு வரிசையில் நிற்பதை காண முடிகிறது. (அ)

# கோப் குழு அறிக்கைமீது 23 ஆம் திகதி விவாதம்!

கொழும்பு, ஜூன் 18

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) முதலாவது அறிக்கை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி மு.ப 11.00 மணி முதல் பி.ப 530 மணி வரை நடைபெறவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாராளுமன்றம் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை கூடவிருப்பதுடன், 24ஆம் திகதி தவிர ஏனைய நாட்களில் மு.ப 10.00 மணி முதல் மு.ப 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பாராளுமன்றம் கூடவிருப்பதுடன் மு.ப 11.00 மணி முதல் 11.30 மணி வரையான நேரத்தில் குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் சிவில் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் ஆகியன விவாதம் இன்றி நிறைவேற்றப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இதன் பின்னர் மு.ப 11.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் விவாதித்து நிறைவேற்றப்படும்.

இதனைத் தொடர்ந்து பி.ப 4.30 மணி முதல் 4.50 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி மு.ப 11.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய நாட்டில் தற்பொழுது நிலவும் சுகாதாரப் பிரச்னைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறவுள்ளது.

அத்துடன், அண்மையில் இடம்பெற்ற குழப்பமான சம்பவங்களின் போது படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள தொடர்பான அனுதாபப் பிரேரணையின் இரண்டாவது நாள் விவாதத்துக்காக எதிர்வரும் 24ஆம் திகதி மு.ப 10.00 மணி முதல் பி.ப 5.30 வரையான நேரத்தை ஒதுக்குவதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (அ)


# வீட்டுத் தோட்டம் செய்வோம்

**வளம் கொழிக்கும் பூமி என**
**வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்**
**பெயர் பொறித்த நம் தாய்நாடு.**
**இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்**
**உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.**
**மூன்று வேளை உணவு இருவேளையாகவும்**
**ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.**
**பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே**
**நிழலாடுகின்றன...!**



## போதும்...! ஏந்திய கைகள் சற்றே உயரட்டும்

**நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!**

**வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்**
**நமது பசியை நாமே போக்க...**

**எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!**

**பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு**
**போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!**
**திட்டமிடலும் உழைப்புமே**
**நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!**

DAN TELEVISION
www.dantv.tv
ஈழநாடு
Eelanadu

## கச்சதீவு...

சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னாரில், நேற்று கடற்றொழில், நீர்வேளாண்மை செயல்பாடுகள் மற்றும் அவற்றை முன்னேற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டத்தில் அமைச்சர் பங்கேற்றிருந்தார். இதன்போது, மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் முறை முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திய மன்னார் மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், தவறான நோக்குடன் இந்தியத் தரப்பினரால் கச்சதீவு தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறித்த விடயத்தில் அமைச்சர் வெளியிட்ட நிலைப்பாடு தொடர்பாக மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தனர்.

மேலும், தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக சுட்டிக்காட்டிய மன்னார் கடற்றொழிலாளர்கள், அவற்றை தேவையானளவு கிடைக்கச் செய்யுமாறு கேட்டதுடன், நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்தியா வழங்கி வரும் உதவிகளுக்கு கைமாறாக, தங்களுடைய வளங்களை அழிக்கும் சட்ட விரோத தொழில் முறையை அனுமதிக்கவோ அல்லது கச்சதீவை கையளிக்கவோ அனுமதிக்க கூடாது எனவும் வலியுறுத்தினர்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

“எமது வளங்களை அழிக்கும் தொழில் முறையை கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் நான் உறுதியாகவே இருக்கின்றேன். கச்சதீவு விவகாரம் அரசியல் நோக்கங்களுக்காக சிலரால் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது. எனினும், அவ்வாறான எந்த வகையான எதிர்பார்ப்புக்களும் இந்திய மத்திய அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.

உண்மையிலேயே, குறித்த ஒப்பந்தம் காரணமாக மீன்வளம் நிறைந்த கணிசமானளவு கடல் பரப்பில் மீன்பிடியில் இலங்கை கடற்றொழிலாளர்கள் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பெரியளவில் யாரும் கதைப்பதில்லை. இந்த உண்மையை வெளிப்படுத்தும் வகையில் இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவருக்கு கடிதம் அனுப்புவதற்கு திட்டமிட்டு வருகின்றேன்.

இந்தியாவுக்கும் காங்கேசன்துறை மற்றும் தலைமன்னாருக்கும் இடையில் போக்குவரத்து சேவையை மேற்கொள்வது தொடர்பான எனது நீண்ட முயற்சி தற்போது கணிசமான முன்னேற்றத்தை கண்டுள்ளது. அது செயல்பட ஆரம்பிக்குமாயின், எரிபொருள் பிரச்னை மாத்திரமன்றி, மருந்துப் பொருட்கள், விவசாயிகளுக்கான உரப் பிரச்னை உட்பட அத்தியாவசிப் பொருட்களுக்கான பற்றாக்குறையும் நீங்கி விடும் என்று எதிர்பார்க்கின்றேன்.”என்றார்.

கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மை செய்கை அதிகரிப்பதால் பாரம்பரிய கடற்றொழில் பாதிக்கப்படும் என்ற கருத்தை மறுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழிலை நம்பி வாழ்கின்ற மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான மேலதிக வழிமுறையாகவே நீர்வேளாண்மை ஊக்குவிக்கப்படுகின்றது எனவும் கூறினார். (ஐ)

## பாடசாலைகளை...

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளி யிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை யில்,

இன்றைய மோசமான நிலைமை இலங்கையில் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. சகல பொருட் களின் விலைகளும் அதி கரித்தே செல்கின்றன. ஆனாலும் அந்தப் பொருட்களைப் பெற முடியாமல் உள்ளது. இதன் காரணமாக சகல துறைகளுமே ஸ்தம்பிக் கும் நிலை ஏற்பட் டுள்ளது.

பாடசாலை என்பது மாணவரைமையப்படுத்திய நிறுவனமாகும். மாணவர் துயரப்பட்டு பாடசாலைக்கு வந்து கற்கமுடியாது. அவர்களுக்கு கல்வியூட்டும் கல்வியியலாளர்கள் குடும்பங்களோடு இணைந்தவர்கள். அவர்கள் ஏனைய மக்களைப் போன்று பல்வேறு சிரமங்களையும் சுமந்தவர்களாக உள்ளனர். அவை எவற்றையும் பொருட்படுத்தாமல் பணியை தர்மமாகக் கருதி பணியாற்றும் அவர்கள் கடமைக்கே செல்லமுடியாது தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து மார்க்கங்கள் எதுவுமே சீராக இல்லை. தாமாக செல்வதற்கும் வழியில்லை. இந்நிலையில், பாடசாலைகளை தொடர்ந்து இயக்க முடியாது. என்பதனை அரசாங்கம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. மீண்டும் தோற்றுப்போன இணையவழி முறையை அரசாங்கம் புகுத்தி நாட்டில் உள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இன்னும் சுமையை ஏற்படுத்தப்போகின்றது.

ஆகையால், நாம் முன்வைத்த மாணவர், ஆசிரியர்களுக்கான போக்குவரத்து மார்க்கங்களை இலவசமாக்குவதே பாடசாலைகளை தொடர்ந்தும் இயக்க ஒரேவழி. இதைவிடத் தொடர்ச்சியாக வரவழைப்பதைத் தவிர்த்து சுழற்சி முறையை பயன்படுத்த வேண்டும் என கல்வி அமைச்சிடம் தெரிவித்துள்ளோம் - என்றுள்ளது. (ஐ)

## இறுதி போரில்...

சரணடைந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் சம்பந்தமான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றத்தில் இன்று (நேற்று) வழங்கப்பட இருந்தபோதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என நீதிமன்றத்தினால் கூறப்பட்டுள்ளது.

ஆகவே ஜூலை மாதம் முதலாம் திகதி நாம் தீர்ப்புக்காக காத்திருக்கின்றோம்- என்றார். (அ)

## கிடைக்கும்...

வழங்கியுள்ளார்.

நிதி அமைச்சு, மத்திய வங்கியுடன் இணைந்து அரச மற்றும் தனியார் வங்கிகளின் ஒத்துழைப்புடன் போதுமான எரிபொருளை முன்பதிவு செய்வதற்கான நாணய மாற்று பத்திரங்களை திறப்பதற்கும் திட்டங்களை வகுக்குமாறும் அவர் கூறியுள்ளார்.

பெற்றோல், டீசல், எரிவாயு விநியோகம் மற்றும் இறக்குமதி தொடர்பில் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

நீண்ட காலத்துக்கு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு விநியோகஸ்தர்களுடன் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கான இயலுமை தொடர்பிலும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்தின்போது, பொது போக்குவரத்திற்கு முன்னுரிமை வழங்குமாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தேவையற்ற வகையில் எரிபொருளை சேமித்து வைப்போருக்கு எதிராக கடுமையாக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பாதுகாப்பு தரப்பினருக்கு பணிக்கப்பட்டுள்ளது.

தற்போது கையிருப்பில் உள்ள எரிவாயுவை உரிய முறையில் பகிர்ந்தளிப்பதற்கும், விரைவாக எரிவாயுவை முன்பதிவு செய்வது தொடர்பிலும் இந்தக் கூட்டத்தின் போது ஆலோசிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# யாழில் நாளை போராட்டம் சிவில் அமைப்புகள் அழைப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 18

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கைலாசப் பிள்ளையார் கோவில் முன்பாக போராட்டம் ஒன்றை மேற்கொள்ள சிவில் அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, தென்மராட்சி சிவில் அமைப்பின் பிரதிநிதி க.அருந்தவபாலன் போராட்டத்திற்கான அழைப்பை விடுத்தார்.

இந்த ஊடக சந்திப்பில் சமூக, விஞ்ஞான ஆய்வு மையம், குரலற்றவர்களின் குரல் அமைப்பு, அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

போராட்டத்தின் கோரிக்கைகள் தொடர்பாக அவர்கள் கருத்து தெரிவிக்கையில், ஐ. நா. மனித உரிமை அலுவலகம் முன்னெடுக்கும் சாட்சியப் பொறிமுறை தேவையற்றது என்று வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்து அதை மூடிவிடுமாறு கோரியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். ஜீ. எல். பீரிஸ் ஜெனீவாவில் 50 ஆவது கூட்டத் தொடரில் ஆற்றிய உரை உண்மைக்குப் புறம்பானது. சர்வதேசக் குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களாகிய நாம் அதை முற்றாக நிராகரிக்கிறோம்.

2021 ஜனவரி 15 ஆம் திகதியன்று அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் குடிசார் அமைப்புகளும் இணைந்து ஒற்றுமையாகக் கோரியிருந்தது போல, சிரியாவுக்கு ஏற்படுத்தப்பட்டதைப் போல முற்றிலும் சுயாதீனமான, சர்வதேச, விசாரணைப் பொறிமுறை ஒன்று நேரடியாக ஐ. நா. பொதுச்சபையின் கிளையமைப்பாக உருவாக்கப்படவேண்டும்.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைப் போக்க நிதி உதவி செய்ய முன்வரும் நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் தீவில், குறிப்பாக வடக்கு - கிழக்கில், சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தைப் போக்கி, ஈழத்தமிழர் தேசத்துக்கும் தமிழ் பேசுவோர் உள்ளிட்ட எந்த ஏனைய மக்களுக்கும் எதிரான இன அழிப்போ ஒடுக்குமுறையோ தொடராத வகையில் அரசியல் உறுதிநிலையைத் தீவில் ஏற்படுத்தியே உதவியைச் செய்ய முன்வரவேண்டும்.

ஏற்கனவே சமாதானப் பேச்சுக்கள் குழப்பப்பட்டதற்கும், சுனாமி அனர்த்தத்தின் பின்னான மீள்கட்டுமானப் பொறிமுறை மறுக்கப்பட்டது போன்றவற்றில் இருந்து கற்ற பாடங்களோடு அரசியல் உறுதிநிலை தொடர்பான காத்திரமான நகர்வுகள் இடம்பெறவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்படவேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பொறுப்புக்கூறல் சர்வதேச மட்டத்தில் கையாளப்படவேண்டும்.

தமிழர் தாயகத்தின் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள், மரபுரிமையை வரலாற்று உண்மைக்குப் புறம்பாக சிங்கள - பௌத்தமாக திரிபுபடுத்துவதை இனிமேலும் நடைபெறாத வண்ணம் நிறுத்த சர்வதேச சமூகம் முன்வரவேண்டும். என்ற கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர். (ஐ)

## ‘தமிழ் ரைம்ஸ்’...



லண்டனில் காலமானார்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட காலத்தில் சர்வதேச அளவில் ‘தமிழ் ரைம்ஸ்’ அக்காலத்தின் அசல் சாட்சியமாகிய பெருமைக்குரியது.

ஜெனிவாவில் மனித உரிமைகள் தொடர்பிலும் இராசநாயகம் நீண்ட காலம் அயராத பணியாற்றினார். கடந்த சில தினங்களாக மருத்துவமனையில் அநுமதிக்கப்பட்டிருந்த அவர் தனது 84ஆவது வயதில் காலமானார்.

## பட்டினியால்...

பிரதமர் இதனைக் கூறியுள்ளார்.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரதேச செயலாளர்களூடாக குழுக்களை அமைத்து, உணவு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவும், இதற்காக, சுரேன் பட்டகொட தலைமையிலான குழு ஊடாக உணவு பாதுகாப்பு தொடர்பில் தேவையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுவதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உணவு நெருக்கடியால் எவரும் பசியோடு வாடக்கூடாது என்பதே தமது கொள்கை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உணவு நெருக்கடியால் எதிர்காலத்தில் 40 இலட்சம் முதல் 50 இலட்சம் இலங்கையர்களை நேரடியாக பாதிக்கக் கூடியதாக இருந்தாலும், அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர் சமூகத்துக்கு உணவு, எரிவாயு மற்றும் எரிபொருள் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

## நாட்டில்...

ஐக்கிய மக்கள் தொழில்சங்கப் படையின் பேச்சாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

ஜூன் 24ஆம் திகதி எரிபொருள் விலை அதிகரிக்கக்கூடும் என்பதால் லங்கா ஐ. ஓ. சி. நிறுவனம் எரிபொருளை விநியோகிக்கவில்லை. 50 மெற்றிக் தொன் பெற்றோலே விநியோகிக்கப்பட்டது.

3 இலட்சம் பரல்கள் (38,000 தொன்) பெற்றோல் இறக்குமதிக்கு இறக்குமதிக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பெற்றோல் வரும் 3 நாட்களில் நாட்டுக்கு வரும். எனினும், ஜூன் 22 அல்லது 23ஆம் திகதிக்குள் பெற்றோல் தட்டுப்பாடு நிறைவுக்கு வரும் என்று தெரிவித்தார். (ஐ)

## நெருக்கடி...

வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வ தேச நாணய நிதியத்திடம் முன்கூட்டியே சென்றிருந்தால், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து சிக்கலின்றி மீண்டெழ முடிந்திருக்கும் என்றும் அவர் கூறினார்.

வெளியிலிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதை தாமதப்படுத்தியமை தவறு. இந்த வருடத்துக்குள் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமிருந்து 500 கோடி டொலர் உதவியை இலங்கை எதிர்பார்த்துள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக கடந்த மாதமே இலங்கை தனது வெளிநாட்டு கடனை செலுத்தாதிருந்தது. தற்போது, ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை விரைவில் வழமைக்கு திருப்ப முடியாது.

இலங்கையின் சிறந்த நண்பன் என்ற வகையில் சீனா, ஏனைய கடன் வழங்குநர்களிடமிருந்து ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுக்கும் என தாம் நம்புவதாக மத்திய வங்கியின் ஆளுநர் சர்வதேச ஊடகமான பி. பி. சிக்கு தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# எரிபொருள் கோரி வவுனியாவில் ஏ-9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

## இருவர் பொலிஸாரினால் கைது



*வவுனியா, ஜூன் 18*

வவுனியாவில் எரிபொருள் கோரி ஏ9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்ற நிலை யில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

எரிபொருள் விநியோகம் தொடர் பில் செயலி மூலம் வெளியாகிய தகவலுக்கு அமைய நேற்றுமுன் தினம் இரவு முதல் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத் தில் பலர் நீண்ட வரிசையில் நின்றனர்.

ஆனால், நேற்றுக் காலை 10.30 வரை குறித்த எரி பொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் வரா மையால் வழங்கப்படவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த மக் கள் பழைய பஸ் நிலையம் முன்பாக ஏ-9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர். இதன்போது சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர் களை வீதியை விட்டு அகற்றியது டன், போராட்டத்தில் ஈடுபட்ட இருவரை கைது செய்தனர்.

அத்துடன், குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளருட னும் கலந்துரையாடினர். இதன் போது எரிபொருள் இன்னும் வந்து சேரவில்லை என அவர்கள் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து போராட் டத்தில் ஈடுபட்டவர்களை அகற்றிய பொலிஸார் கைது செய் யப்பட்ட இருவரிடமும் வாக்கு மூலங்களைப் பெற்ற பின் எச்சரித்து விடுதலை செய்தனர்.

இதேவேளை, முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இரவு முதல் நிற்பதாகவும் இரண்டு லீற்றர் பெற்றோலாவது தாருங் கள் என கண்ணீர் விட்டு அழுதிருந்திருந்தமை குறிப்பி டத்தக்கது. (அ)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

*யாழ்ப்பாணம், ஜூன் 14*

உலகெங்கும் வாழும் மக்கள் அனைத்து நோய் நொடிக ளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் - சுன்னா கம் - கந்தரோடை கோட்டம்கட்டு ஞான வைரவர் கோயிலின் பிரதம குருக்கள் பிரமஸ்ரீ சா. கோபாலசர்மா அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (ஐ)

# இரத்ததான முகாம்!

*யாழ்ப்பாணம், ஜூன் 18*

கரித்தாஸ் கியூடெக் அமைப்பின் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டு இளையோர் அமைப்பு - மணியந தோட்டம் நடத்தும் இரத்த தான முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் - மணியந்தோட்டம் கர்த்தர் ஆலய மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (ஐ)









# மரண அறிவித்தல்



தோற்றம் 18 - 03 - 1968

மறைவு 16 - 06 - 2022

## கிருஷ்ணன் சிவானந்தன் [சிவா]

புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாலோடையைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் செங்காளன் Wil ஐ வசிப்பிட மாகவும் கொண்ட கிருஷ்ணன் சிவானந்தன் அவர்கள் 16.06.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கிருஷ்ணன் திரவியம் தம்பதிகளின் அன்பு மகனும்,பத்மாவதி (பேபி) அவர்களின் அன்புக் கணவரும்,நிலவன் அவர்களின் பாசமிகு தந்தையும், ஈஸ்வரநாதன்(ஜேர்மனி), உமாபதி, கங்காபதி, மைதிலி (ஜேர்மனி), அம்பிகாவதி ஆகியோரின் அன்புச் சகோதர னும், நேசன்(லண்டன்), செல்வம், வினோத்(ஜேர்மனி), தீபன், காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மதுஷா (ஜேர்மனி), டெனுஷன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், சுதன், கயூரன் (ஜேர்மனி), கார்த்திகா, சாந்திகா, அபி, கஷ்மி, புகழ், வைசு (ஜேர்மனி), மிதுன் (ஜேர்மனி), ஆதி, ஆரவி (லண்டன்), கரிஸ்(லண்டன்), கஷ்வின் ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்றவர்களான பெரியார், லக்ஷ்மி, தம்பு, ராசு ஆகியோரின் அன்புப் பேரனும், அண்ணாச்சாமி, செல்வராணி, காலஞ்சென்ற பூராசா, சிவலிங்கம், கணேசலிங்கம், இதயராணி, காலஞ்சென்ற அருந்தவம், மகேஷ்வரி, வசந்தி, லோகேஷ்வரி ஆகி யோரின் அன்பு மருமகனும்,தங்கமணி, துரைராசா, கல்யாணி, நடராசா, கிளி, லோகேஸ்வரன், காலஞ் சென்ற இராசதுரை ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

பார்வைக்கு
Friday, 17 Jun 2022 10:00 AM - 6:00 PM
Saturday, 18 Jun 2022 10:00 AM - 6:00 PM
Sunday, 19 Jun 2022 10:00 AM - 6:00 PM
Monday, 20 Jun 2022 10:00 AM - 6:00 PM
Tuesday, 21 Jun 2022 10:00 AM - 6:00 PM
Wednesday, 22 Jun 2022 10:00 AM - 6:00 PM
Ebnet-Saal Industriestrasse 2, 9552 Bronschhofen, Switzerland

கிரியை
hursday, 23 Jun 2022 10:00 AM - 2:00 PM
Friedhof Feldli Feldlistrasse 18, 9000 St. Gallen, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருத்தணிகாசலம் - நண்பர்**

தொடர்புகளுக்கு:
**பத்மாவதி - மனைவி** Mobile : +41719316634
**நிலவன் - மகன்** Mobile : +41787480716
**ஈசன் - சகோதரன்** Mobile : +4917683153563
**மைதிலி - சகோதரி** Mobile : +4915217847588
**நேசன் - மைத்துனர்** Mobile : +447904664832
**உமாபதி - மைத்துனி** Mobile : +94774716267
**அம்பிகாவதி - மைத்துனி** Mobile : +94761661335
**திருத்தணிகாசலம் - நண்பர்** Mobile : +41775081664
**சிவா - நண்பர்** Mobile : +41765287112

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 - 04 - 1944

மறைவு 13 - 06 - 2022

## திருமதி பசுபதிப்பிள்ளை யோகம்மா

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை யோகம்மா அவர்கள் 13.06.2022 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் ஐயாத்தாபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் விசாலாட்சி தம்பதி களின் அன்பு மருமகளும், பசுபதிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும்,சசிகலா, பாலவிநாயகன் (ஜேர் மனி), வித்தியாதரன், ஸ்ரீதரன், தயாதரன், உதயகலா (இந்தியா), சுவிதகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், கேதீஸ், இராஜேஸ்வரி (பவா- ஜேர்மனி), பத்மரூபி, ஜெயந்தி, பிரதீபா, லோகேஸ்வரன்(இந்தியா), பிரியதர் சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான சோமர், இராசன், ஞானாம்பாள் மற்றும் தில்லையம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடராசா, கமலாதேவி, லோகநாயகி, காலஞ் சென்ற கண்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, நடராசா ஆகியோ ரின் அன்புச் சகலியும்,சங்கீஸ், சாருகாஸ், குலனேஸ், குகனேஸ், ஆதித்யா, ஜெனுசன், டினுசியா, ஜெயந்தன், ஸ்ரீபவன், சயு, கயு, தணிகன், ரிஷபன், நிலாசினி, நதீக்கா, பிரதீப், ஆரணி, அபினேஸ் ஆகியோரின் அன் புப் பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 19 Jun 2022 6:00 PM - 9:00 PM
Monday, 20 Jun 2022 9:00 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Monday, 20 Jun 2022 10:00 AM - 11:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Monday, 20 Jun 2022 11:30 AM
Highland Hills Funeral Home and Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வித்தி - மகன்**

தொடர்புகளுக்கு:
**பாலன் - மகன்** Mobile : +491727745352
**வித்தி - மகன்** Mobile : +16479880436
**ஸ்ரீ - மகன்** Mobile : +16473264222
**தயா - மகன்** Mobile : +16478021732
**சசி - மகள்** Mobile : +19054241100
**உதயா - மகள்** Mobile : +919176438038
**சுவிதா - மகள்** Mobile : +14166664021

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- தீனா
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்-நடிகர் நம்பியார்



5.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை-நாடாளுமன்ற தேர்தல் தற்கால சூழலில் அவசியமா?



**இரவு**

07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு




07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: டான் பட்டிமன்றம்-தந்தையர்தின சிறப்பு
10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சக்தி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு